இணை தாமரை


Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



PC PARADISE

நியாயமான விலையில் தரமான கணனிகளையும்
கணனி உதிரிப் பாகங்களையும் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

Pc Paradise

இல. 61. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோவில் அருகில்)

TP No. 0777-271220

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 15 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 25 (30.12.2002) திங்கட்கிழமை இதழ் : 90

## உரும்பிராய் சிறுமியின் மர்ம மரணம் நடவடிக்கை எடுக்குமாறு மறியல்!

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் கடந்த வெள்ளிக்கிழமை சிறுமியொருவர் மர்மமான முறையில் மரணமான சம்பவத்தைக் கண்டித்தும் அச்சிறுமியின் உடல் கண்டெடுக்கப்பட்ட கிணறு அமைந்திருக்கும் உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய நிர்வாகம் இம்மரணம் தொடர்பாக மௌனமாக இருப்பதைக் கண்டித்தும், நேற்றுப் பாடசாலை முன்பாகவுள்ள வீதியில் மறியல் போராட்டம் நடைபெற்றது.

பாடசாலைக்குச் சென்ற சிறுமி பாடசாலையில் வைத்தே கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளதால் - பாடசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரியே நேற்று உரும்பிராய் மக்களும் பாடசாலை மாணவர்களும் பாடசாலைக்கு முன்பாக இம்மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலைக்கு முன்னாலுள்ள வீதி போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருந்ததுடன், இம்மறியல் போராட்டம் நேற்றுக்காலை 8 மணியிலிருந்து மதியம் 12.30 மணிவரை நடைபெற்றது.

(10ஆம் பக்கம் பார்க்க)




மாணவர்களின் மறியற்போராட்டத்தையும், சிறுமி சடலமாகக் கண்டெடுக்கப்பட்ட கிணற்றையும் படங்களில் காணலாம். *(மேலும் படங்கள் உள்ளே)*

# படையதிகாரிகளுடன் சந்திப்பு எதுவுமில்லை; மீள்குடியேற்றம் பற்றி தாய்லாந்திலேயே பேச்சு!

## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு

(லண்டன்)



**உயர் பாதுகாப்பு வலயங்களில் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக தாய்லாந்தில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையிலேயே இனி நேரடியாகப் பேசப்படும். அதற்கு முன்னர் படையதிகாரிகளுடன் பேசுவதற்கு எந்த வாய்ப்பும் இல்லை என புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அறிவித்துள்ளார்.**

உயர்பாதுகாப்பு வலய நெருக்கடிகள் குறித்து கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்று மேலும் தகவல் வெளியிடும்போது -

இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாகவும், மீளக்குடியமர்த்தப்படும் இடங்களில் சுமுகநிலையை உருவாக்குவது பற்றியும் தாய்லாந்தில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பேச்சுக்களில் முக்கியமாக ஆராயப்படும்.

இடம்பெயர்ந்த மக்களின் நூற்றுக்கணக்கான வீடுகளை விட்டு விலகுவதற்கு இராணுவம் மறுப்புத் தெரிவித்துள்ளது. இதுபோர் நிறுத்த உடன்பாட்டுக்கு முரணான செயலாகும்.

அத்துடன் பாதுகாப்பு விவகாரங்களைக் கையாளும் குழுவினது செயற்பாட்டை இது அர்த்தமிழக்கச் செய்வதோடு, உடனடி மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வுத் தேவைகளுக்கான உபகுழுவின் செயற்பாடுகளும் பாதிப்படையும் நிலை உருவாகியுள்ளது.

எனவே - மீள்குடியேற்றம், உயர் பாதுகாப்பு வலய நீக்கம் ஆகிய விடயங்களை நேரடிப் பேச்சுக்களின்

(10ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதர் வெஸ்பேர்க் இடமாற்றம் பெற்றுச் செல்கிறார்!

(கொழும்பு)

நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் இடமாற்றம் பெற்றுச் செல்லவுள்ளார். இவர் இலங்கைக்கான தூதுவர் என்ற பதவியில் இருந்து இடமாற்றம் பெற்று, வேறொரு நாட்டிற்குச் செல்லவுள்ளதாக இராஜதந்திர வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது குடும்பத்துடன் நோர்வேயில் தங்கியுள்ள வெஸ்பேர்க் நாளை மீண்டும் கொழும்பு திரும்புவார். இவர் நோர்வேக்குச் செல்லும் வழியில் இந்தியாவுக்குச் சென்று அங்கு இந்திய வெளியுறவு அமைச்சர் மற்றும் அதிகாரிகளையும் சந்தித்திருந்ததாகவும் தெரியவருகின்றது.

## இலங்கைப் படையதிகாரிகளுக்கு இந்திய கறுப்புப் பூனைகள் பயிற்சி!

(கொழும்பு)

முக்கிய பிரமுகர்களுக்கான பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள மெய்ப்பாதுகாவலர்கள் மற்றும் விசேட அதிரடிப்படைக் கொமாண்டோக்களுக்கு இந்தியாவின் கறுப்புப்பூனைப் படையதிகாரிகள் பயிற்சிகளை வழங்கத் தொடங்கியுள்ளனர்.

இந்தியாவில் மென்சார் பயிற்சித் தளத்தில் பயிற்சி பெறுவதற்காக, இலங்கையில் இருந்து முதலாவது அணி சென்றுள்ளது. முக்கிய பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பயிற்சி வழங்கும் ஒப்பந்தத்தில் இந்திய - இலங்கை அதிகாரிகள் கைச்சாத்திட்டதைத் தொடர்ந்து இப்பயிற்சி வழங்கப்படுகிறது.

ஜனாதிபதி பாதுகாப்புப்பிரிவு,

(10ஆம் பக்கம் பார்க்க)

## வெஸ்பேர்க்கைத் தூதர் பதவியிலிருந்து விலக்க எமக்குப் போதிய காரணங்கள் இருக்கின்றன!

### சந்திரிகா நோர்வே பிரதமருக்குக் கடிதம் அனுப்புகிறார்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கு வானொலி ஒலிபரப்புச் சாதனங்களை வழங்குவதில் நோர்வே அரசாங்கம் தொடர்புபட்டமை தொடர்பாக அந்நாட்டுப் பிரதமருக்கு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடிதம் ஒன்றை அனுப்பத் திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புலிகளின் வானொலி உபகரணங்களைப் பெறுவதற்கு நோர்வே தூதரகம் உதவி வழங்கியிருக்கிறது. இது சமாதானப் பேச்சுவார்த்தைகளின் ஏற்பாட்டாளர் என்ற நிலையை நோர்வே மீறும் செயலாகும்.

இந்த உபகரணங்கள் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் பாரதூரமானவிடயமாக அமைந்துள்ளதாக ஜனாதிபதி கருதுவதாகவும் அவரது கடிதம் அமையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், நோர்வேத்தூதுவர் வெஸ்பேர்க் இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்பதற்கு தம்மிடம் சாட்சிகள் உள்ளதாகவும் இவரைத் தூதுவர் பதவியில் இருந்து விலக்குவதற்குப் போதிய ஆதாரங்கள் இருப்பதாகவும் சந்திரிகா தனது கடிதத்தில் குறிப்பிடுவார் எனவும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

(க)

## நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் பொலிஸார் அத்துமீறி முகாம் அமைப்பு!

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேச செயலகப் பிரிவுக்கான வலுவூட்டற்பயிற்சி நிலையக் கட்டடத்தில் அத்துமீறி நுழைந்த பொலிஸார் அக்கட்டடத்தில் நிலைகொண்டுள்ளனர்.

பொலிஸார் நிலைகொண்டுள்ள ஏனைய அறைகளில் பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான பெறுமதி வாய்ந்த பொருட்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை - ஈ.பி.டி.பியினரின் வருகையின் பின்னர் அவர்களுக்கு பாதுகாப்பாக வந்த பொலிஸாரும் நெடுந்தீவில் நிலைகொண்டுள்ளதால், அப்பகுதி முழுவதும் இராணுவப் பிரதேசம் போலவே காணப்படுகின்றது.

(113)

### விண்ணாணம் விநாசியர்




ஒஸ்ரினுக்கு மட்டுமில்லை நாட்டுல எல்லாருக்குமே அவரை விளங்கிக் கொள்றது கஸ்டமாத்தான் இருக்குது!

## பாதுகாப்பு வலய விவகாரத்தில் ஜனாதிபதி தலையிடுவது ஏன்?

### புரியவில்லை என்கிறார் ஒஸ்ரின் பெர்ணான்டோ

உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா நேற்றுமுன்தினம் மாலையும் நேற்றும் படை அதிகாரிகளுடன் நடத்திய தொடர் பேச்சுகள் குறித்துத் தமக்கு எதுவும் தெரியாது எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார்.

உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் வேறு வகையான அணுகுமுறைகளைப் பரிசீலித்து வருகின்றது. இந்தநிலையில் ஜனாதிபதி சந்திரிகா எதற்காக இந்த விடயத்தில் தலையிடுகிறார் என்பது புரியவில்லை என்றும் ஒஸ்ரின் பெர்ணான்டோ மேலும் தெரிவித்தார்.(200)

# தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி 10 விக்கெட்டுக்களால் வெற்றி



வெற்றிக்கான ஓட்டங்களைத் தொட்ட கிப்ஸ்

(டேர்பன்)

டேர்பனில் தென்னாபிரிக்க - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காவது நாளான நேற்று 10 விக்கெட்டுக்களால் தென்னாபிரிக்கா வெற்றியீட்டியது.

பாகிஸ்தான் முதல் இனிங்ஸ்ஸில் 161 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸ்ஸில் 250 ஓட்டங்களையும் பெற்றது. தென்னாபிரிக்க அணி முதல் இனிங்ஸ்ஸில் 368 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸ்ஸில் 18 ஓட்டங்களையும் பெற்று வெற்றி இலக்கை எட்டியது.

இதன் மூலம் டெஸ்ட் தொடரில் 1-0 என்ற நிலையில் தென்னாபிரிக்கா முன்னணியில் உள்ளது.

# இரண்டாவது போட்டியிலும் இந்திய அணி தோல்வியுற்றது



விளாசித் தள்ளிய அஸ்லே.

(நேப்பியர்)

இந்திய - நியூசிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று நடந்த இரண்டாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியிலும் நியூசிலாந்து அணி வெற்றியைப் பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் கங்குலி - நியூசிலாந்தைத் துடுப்பெடுத்தாடப் பணித்தார். முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கட்டுக்களை இழந்து 254 ஓட்டங்களைப் பெற்றது.

நதன் அஸ்லே 76 ஓட்டங்களையும் மத்யூ சின்கிளயர் 78 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்திய அணி வீரர்கள் சிறிநாத மற்றும் சஹீர்கான் ஆகியோர் தலா 3 விக்கட்டுக்களை வீழ்த்தினர்.

இந்திய அணி வீரர்கள் பந்து வீச்சில் நேரத்தை வீணடித்ததற்காக 48 ஓவர்களில் 255 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற இலக்குடன் ஆட்டத்தை ஆரம்பித்தனர்.

இந்திய அணிவீரர் வீரேந்திர ஷேவாக் அதிரடி ஆட்டம் ஆடியபோதும் ஏனைய வீரர்கள் நின்று பிடிக்காததன் காரணமாக, இந்திய அணி 43.4 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 219 ஓட்டங்களை மட்டுமே பெற்று 35 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஷேவாக் 111 பந்துகளில் எட்டு பவுண்டரிகள், இரண்டு சிக்ஸர்களுடன் 108 ஓட்டங்களைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டி அவுஸ்திரேலியா வெல்லும் நிலையில்



இவ்வருடத்தில் அதிகூடிய டெஸ்ட் ஓட்டங்களான - 1481 ஓட்டங்களைப் பெறறார் வாகன்.

(மெல்போர்ண்)

அவுஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் கிண்ணத்திற்கான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலும் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெறக்கூடியநிலை ஏற்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய அணி தனது முதல் இனிங்ஸ்ஸில் 6 விக்கெட்டுக்களை இழந்து 551 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியிருந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 270 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்ததால் தொடர்ந்தும் இரண்டாம் இனிங்ஸ்ஸில் துடுப்பெடுத்தாடியது. இங்கிலாந்து வீரர் மைக்கல் வாகன் 145 ஓட்டங்களைப் பெற்றார்.

378 ஓட்டங்களை மட்டும் பெற்று இரண்டாவது இனிங்ஸ்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இங்கிலாந்து அணி இழந்ததால், 106 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரேலிய அணி ஆட்டத்தை ஆரம்பித்தது.

நான்காவது நாளான நேற்று மாலை போட்டி இடைநிறுத்தப்பட்ட போது, விக்கெட் எதையும் இழக்காமல் அவுஸ்திரேலியா 8 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இன்னும் 98 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் இன்று அவுஸ்திரேலிய அணி ஆட் டத்தை ஆரம்பிக்கும். இவ் அணி வலுவான நிலையில் இருப்பதால் இன்று அவுஸ்திரேலிய அணி வெற்றிபெறுவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

# விளையாட்டு



நேற்றைய ஆட்டத்தில் சில காட்சிகள்

# சிறுமியின் சடலம் தாயிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் மர்மமான முறையில் இறந்து காணப்பட்ட பத்து வயதுச் சிறுமியின் சடலம் நேற்று வைத்திய பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயத்தில் தரம் ஐந்தில் கல்வி கற்கும் செல்வராசா துவாரகா (வயது 10) என்ற சிறுமி கடந்த வெள்ளிக்கிழமை பாடசாலை புலமைப்பரிசில் வகுப்பிற்கு சென்றவேளை காணாமற்போய் சடலமாக கிணற்றிலிருந்து மீட்கப்பட்டிருந்தார்.

இக்கொலை தொடர்பான மரண விசாரணைகள் நடைபெற்றபோது வைத்திய பரிசோதனை நடாத்துமாறு யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

இவ்வுத்தரவின் பேரில் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனையை சட்ட வைத்திய அதிகாரி மேற்கொண்டார். இதன்போது சிறுமியின் உடல் உள் உறுப்புக்கள் மற்றும் இரத்தம், சலம், ஆகியவற்றின் மாதிரிகள் கொழும்பில் மேலதிக ஆய்வுகள் செய்வதற்காக கொண்டு செல்லப்படும் பொருட்டு எடுத்து வைக்கப்பட்டன. பின்னர் சிறுமியின் சடலம் தாயாரான செ.தவனேஸ்வரியிடம் கையளிக்கப்பட்டது.

(லி,கி)

# ஆயிரத்து 200 கடற்தொழிலாளருக்கு ஜனவரியில் அடையாள அட்டை

மீனவர்களுக்கான கடற்தொழிலாளர் அடையாள அட்டைகள் ஜனவரி முதல் வழங்கப்படவுள்ளன. இதற்காக கொழும்பிலிருந்து முதற்கட்டமாக ஆயிரத்து இருநூறு அடையாள அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடற்தொழிலாளர்கள் தொழிலில ஈடுபடும்போது ஏற்படும் கெடுபிடிகளைத் தவிர்ப்பதற்கும் எதிர்காலத்தில் கடற்தொழிலாளர்கள் சலுகைகளைப் பெற உதவும் முகமாக, கடற தொழில் நீரியல் வள திணைக்களத்தினால் இந்த அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக விண்ணப்பித்த ஐயாயிரம் விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. மேலும் ஆயிரத்து இருநூறு பேருக்கான அடையாள அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றினை எதிர்வரும் மாத நடுப்பகுதியில் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கடற தொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குடாநாட்டிலுள்ள கடற்தொழில் பரிசோதகர் பிரிவுகளில் விண்ணப்பிக்காதவர்களுடைய விபரங்கள் சேகரிக்கப்பட்டு அவர்களுக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

(ச,கி)

# 2003 – அபிவிருத்தி ஆண்டாக அரசாங்கம் பிரகடனம் செய்யும்

## அமைச்சர் கரு ஜெயசூரிய

2003ம் ஆண்டை நாட்டின் அபிவிருத்தி ஆண்டாக அரசாங்கம் பிரகடனம் செய்யவுள்ளது என மின்சக்தி எரிபொருட்துறை அமைச்சர் கரு ஜெயசூரிய தெரிவித்தார்.

இவ்வருடத்தில் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் தொடர்பாக 2 இலட்சத்து 50 ஆயிரம் மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது என்றும்-வேலையற்றோருக்கு வேலை வாய்ப்புப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் பல்வேறு திட்டங்கள் அடுத்த வருடம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சர் கரு ஜெயசூரிய மேலும் தெரிவித்தார்.

பேருவளையில் அமைக்கப்பட்ட வீடமைப்புத்திட்டத்தை வீட்டு உரிமையாளர்களுக்கு கையளிக்கும் வைபவத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# பாடசாலை மாணவருக்கு மட்டுமே இனி பருவகாலச் சீட்டுக்கள்!

## வட பிராந்திய போக்குவரத்துச் சபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச்சபை சீரான பஸ் சேவையை நடத்தமுடியாதிருப்பதால், எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் பயணிகளுக்கு பருவகாலச்சீட்டு வழங்குவதை நிறுத்தியுள்ளது.

பஸ் பற்றாக்குறை, ஆளணிப்பற்றாக்குறை என்பவற்றின் காரணமாக சீராக பஸ்சேவையை நடத்த முடியாது இருப்பதாக வட் பிராந்திய போக்குவரத்துச்சபை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக பல்கலைக்கழக, தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கும், வயது வந்தோருக்குமான பருவகாலச்சீட்டுக்கள் ஜனவரி மாதம் முதல் விநியோகிக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமே பருவகாலச்சீட்டுக்கள் வழங்கப்படும் எனத் தெரிய வருகிறது.

இதனால் அரச, தனியார் ஊழியர்கள் மற்றும் உயர் கல்வி மாணவர்கள் பெரிதும் சிரமங்களுக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

ராஜா யாழ்ப்பாணம்.
31.12.2002 வரை
எம்.ஜி.ஆர்., ராதா சலூஜா நடித்த
இதயக்கனி
10.30, 2.30 மட்டும்
30 – 31 AIRFORCE I
இரவு 7.00 மட்டும்
1.1.2003 சுந்தரா ரவல்ஸ்
(சி-262)

நிறஞ்சனாஸ் சங்கானை
இன்று மட்டும்
தென்காசிப்பட்டணம்
நாளைமுதல்
அஜித், மீனா நடித்த
வில்லன்
(சி/287) 11.00, 2.45, 6.00 (பு.நே.)


புது வருடத்தை முன்னிட்டு சிறப்புத் தள்ளுபடி!
31.12.2002 வரையுமே
தரமோ உயர்வு! விலையோ மலிவு!!
லலிடன் புடவை நிலையம்
(பஸ் நிலையம் முன்பாக)
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.-2222381
(சி-36?)

உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையில்

# கடுமையான போக்கைக் கடைப்பிடிக்குமாறு பொன்சேகாவுக்குச் சந்திரிகா ஆலோசனை

(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவும், குடாநாட்டுக்கான இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவும் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி சந்திரிகாவுடன் நீண்ட நேரம் பேச்சுக்களை நடாத்தியுள்ளார்.




சுமார் இரண்டு மணிநேரம் நீடித்த பேச்சுக்களில், குடாநாட்டில் உள்ள உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை குறித்து முக்கியமாகப் பேசப்பட்டது.

இச்சந்திப்பின்போது ஜனாதிபதி சந்திரிகாவினால், குடாநாட்டுத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா வெகுவாகப் பாராட்டப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இராணுவ நலன் சார் விடயங்களில் சரியான நிலையிலிருந்து பொன்சேகா அணுகுவதாகவும் பாராட்டிய ஜனாதிபதி, தொடர்ந்தும் இவ்விடயத்தில் கடும்போக்கினைக் கடைப்பிடிக்குமாறு ஆலோசனை கூறியதாகவும் தெரியவந்துள்ளது.

இந்தச் சந்திப்பின்போது இராணுவத் தளபதி லயனல் பலகல்ல, உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான சிக்கல்களை ஜனாதிபதி சந்திரிகாவுக்குத் தெளிவாக விளங்கப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சமஷ்டித் தீர்வைக் கண்டித்து ஏழு பிக்குகள் உண்ணாவிரதம்!

## விரைவில் ஆரம்பிக்கத் திட்டம்

(கொழும்பு)

சமஷ்டி ஊடாக நாட்டைப் பிரிவினை நோக்கி செலுத்துவதைக் கண்டித்து ஏழு பௌத்த பிக்குகள் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

ஜே.வி.பியுடன் இணைந்து தேசப்பிரேமி பிக்குகள் முன்னணியே இப்போராட்டத்தை நடத்தவுள்ளது.

சமஷ்டி என்பது தமிழீழத்துக்குச் சமனாகும். தமிழீழத்தின் இன்னொரு வடிவமே சமஷ்டி. நாட்டின் ஒருமைப்பாடு சமஷ்டி என்ற பெயரில் இழக்கப்படுவதை ஏற்கமுடியாது என்று அறிவித்துள்ள அம்முன்னணி- முதற் கட்டமாக ஏழு பிக்குகள் தொடர்ச்சியான சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடத் தயாராகி வருகின்றனர் என அறிவித்துள்ளது.

உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை

# உயர் படையதிகாரிகளுடன் திலக் மாரப்பன ஆராய்வு!

(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயங்களில் பொதுமக்களை மீளக் குடியமர அனுமதிப்பது தொடர்பாக எழுந்துள்ள நெருக்கடிகள் குறித்து உயர்மட்டப் படையதிகாரிகளுடன் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன ஆராய்ந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இராணுவ உயரதிகாரிகளுடன் இந்த உயர்மட்ட இரகசியக் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் உயர்பாதுகாப்பு வலயங்கள் குறித்தும், அவற்றில் மீள்குடியமர்வு இடம்பெறுவதால் ஏற்படும் நிலை குறித்தும் விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது.

### தவறணை விஷமிகளால் எரிப்பு

(அரியாலை)

அரியாலை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான தவறணை ஒன்று எரித்து நாசமாக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழனன்று அதிகாலை 3 மணியளவில் ஈச்சமோட்டையில் உள்ள இத்தவறணை விஷமிகளால் எரித்து நாசமாக்கப்பட்டது.

கூரைகள், கதவுகள், தளபாடங்கள் முற்றாக எரிந்து போனதால், தமது சங்கத்திற்கு சுமார் 25 ஆயிரம் பெறுமதியான சொத்துக்கள் நாசமாகப் போயுள்ளதென்றும், இது பற்றி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அரியாலை பனை தென்னைவள உற்பத்திக் கூட்டுறவுச்சங்க முகாமையாளர் த.புஸ்பராஜா தெரிவித்துள்ளார்.

# கடனைத் திருப்பிச் செலுத்தாததால் ரயில் சேவைகள் பாதிக்கப்படும் நிலை

(கொழும்பு)

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் விநியோகம் செய்ய நிபந்தனை விதித்திருப்பதால், ரயில்வேத் திணைக்களத்தின் ரயில் சேவைகள் பாதிக்கப்படும் நிலை உருவாகலாம் எனத் தெரியவருகின்றது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் எரிபொருள்களைக் கொள்வனவு செய்தது தொடர்பாக, 60 கோடி ரூபாவை ரயில்வேத் திணைக்களம் செலுத்த வேண்டியுள்ளது.

இதனைச் செலுத்தாவிட்டால் ரயில்வேத் திணைக்களத்துக்கான சகல எரிபொருள் விநியோகங்களையும் தாம் நிறுத்தப் போவதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

தமது கூட்டுத்தாபனம் பல வங்கிக் கடன்களைச் செலுத்த வேண்டியிருப்பதால், கடனுக்கு எரிபொருளை விநியோகிக்க முடியாதிருப்பதாகவும், ரயில்வேத் திணைக்களம் கடனை மீளளிக்கத் தவறினால் எரிபொருள் விநியோகத்தை நிறுத்திவிடப் போவதாகவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் தகம் விமலசேன தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விநியோகம் நிறுத்தப்பட்டால் ரயில் சேவைகள் முற்றாகச் சீர்குலையும் என ரயில்வேத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

### அமெரிக்க சிப்பந்தியின் குடிபோதை கலாட்டா

(கொழும்பு)

கொழும்பில்-அமெரிக்காவின் கப்பல் சிப்பந்தி ஒருவர் குடிபோதையில் காரொன்றின் கண்ணாடிகளை உடைத்ததுடன், கார்ச்சாரதியையும் தாக்கியுள்ளார்.

இதுபற்றி, அமெரிக்கத் தூதரகத்திற்கு அறிவித்த இலங்கை வெளிவிவகார அமைச்சரகம், சம்பந்தப்பட்ட நபர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமென்றும் கோரியுள்ளது.

ஆனால்-இது பற்றி எந்தப் பதிலினையும் அமெரிக்கத் தூதரகம் நேற்றுவரை வெளியிட வில்லை.

# திருமலை விளாங்குளத்தில் விகாரை அமைப்பது புரிந்துணர்வு உடன்பாட்டை மீறும் செயலே!

## திருமலை மாவட்ட அரசியற்பொறுப்பாளர் திலக் கண்டனம்

அரசாங்கத்திற்கும் எமக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னரும் கூட எமது கோரிக்கைகள் நடைமுறைப் படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை. திருகோணமலை - கண்டி வீதியில் விளாங்குளம் என்னும் இடத்தில் பௌத்த விகாரை அமைக்கப்படுவதை நாம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறிய செயலாகவே கருதுகின்றோம். இவ்வாறான நிலைகள் எமது பிரதேசத்தில் தொடரும் பட்சத்தில் மீண்டும் கொந்தளிப்பான நிலைமைகள் தோன்றலாம் -

இவ்வாறு திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக தெரிவித்தார்.

கடந்த ஒக்டோபர் மாதம் திருமலையில் இடம்பெற்ற ஹர்த்தாலின் போது ஏற்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவத்தில் கொல்லப்பட்ட மூவரது குடும்பத்தினருக்கும் காயமடைந்தோரில் 30 பேருக்கும் நிவாரணங்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கிய நிகழ்வில், கலந்துகொண்டு பேசியபோதே திலக் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகளைப் பற்றிப் பேசிய அவர், தொண்டர் நிறுவனங்களைப் பொறுத்தவரை சரியான புரிந்துணர்வுடன் அவை செயற்படுவதில்லை. இவை பாதிக்கப்பட்ட மக்களை பலன்கள் சென்றடையத்தக்கதாக திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். எமது பிரதேசத்திற்கு நிதி வருவது மிகமிகக் குறைவு. சொற்ப நிதியும் சரியாக பயன்படாவிட்டால் அது மக்களுக்குச் செய்யும் துரோகமாகும். சில நிறுவனங்களைப் பொறுத்தவரை நல்ல திட்டங்களை வைத்திருக்கின்றார்கள். ஆனால், பணம் வைத்திருக்கும் நிறுவனங்களிடம் நல்ல திட்டங்கள் இல்லை. இந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்றார்.

# அரச மருந்தகங்களில் பனடோலுக்குத் தட்டுப்பாடு

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன், ஏழாலை மற்றும் சுன்னாகம் பகுதிகளில் உள்ள அரச மத்திய மருந்தகங்களில் பனடோல் வில்லைக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

தனியார் மருந்தகங்களில் பனடோல் வில்லைகளை வாங்குமாறு வைத்தியசாலைகளுக்கு வருகின்ற நோயாளர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

(83)

# தேர்தல் தொகுதிகள் தோறும் 250 பேர் இளைஞர் படையணியில்

இளைஞர் படையணிக்கு ஆட்களைச் சேர்க்கும் நடவடிக்கை அடுத்த மாதம் ஆரம்பமாகும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்பின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

முதல் கட்டத்தில் ஒரு தேர்தல் தொகுதியிலிருந்து 250 இளைஞர், யுவதிகள் இந்தப் படையணிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர். இவர்களுக்கு 2,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும். இந்தத் தொகையில் 250 ரூபா கட்டாய வைப்புப் பணமாகும்.


இதற்காக மாதம் ஒன்றுக்கு 80 கோடி ரூபா செலவிடப்பட இருக்கின்றது. ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் இளைஞர் படையணிக்கான தொடர்பு அலுவலகம் நிறுவப்படவுள்ளது.


இளைஞர் படையணிக்கு நாடு முழுவதும் 40 ஆயிரம் பேர் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு ஆங்கிலம், கணினிப் பயிற்சி பெற்றுக் கொடுப்பதுடன் வேலை, வாய்ப்பும் அளிக்கப்படவுள்ளது.

### கல்வியியல் கல்லூரி புதிய இடத்தில் இயங்கும்

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கான ஒரு தொகுதி கட்டடப் பணிகள் நிறைவடைந்ததை அடுத்து எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் தனது சொந்த இடத்தில் கல்லூரி இயங்கவுள்ளது. இதேவேளை, இரணடாம் தொகுதிக் கட்டடம் அமைக்கும் பணிகளும் ஜனவரி முதல் ஆரம்பிக்கப்படவிருப்பதாக பீடாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது. (கி)





உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயத்தில் சடலமாக மீட்கப்பட்ட சிறுமியின் மரணம் தொடர்பாக, பாடசாலை நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி, நேற்று இப்பாடசாலைக்கு முன்பாகவுள்ள வீதி மக்களால் போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்டிருப்பதை முதலாவது படத்திலும், மேற்படி பாடசாலைக்கு முன்பாக உரும்பிராய் மக்களும், மாணவர்களும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம். (படங்கள்: லிவிங்ஸ்ரன், ராஜ்குமார்)

# யாழ். மணிக்கூட்டுக் கோபுரத்தின் நிலை இளவரசர் சாள்ஸிற்கு முறையிடப்படும்!

## நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மணிக்கூட்டுக் கோபுரத்தில் பொருத்தப்பட்டிருக்கும் மணிக்கூடுகள் பழுதடைந்தது குறித்துப் பிரித்தானிய முடிக்குரிய இளவரசர் சாள்ஸிற்குக் கடிதம் எழுதவுள்ளதாகத் தமிழ்க் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு மணிக்கூடுகள் பொருத்தவென, பிரித்தானிய அரசாங்கம் பத்து இலட்சம் ரூபாவை ஒதுக்கி, இலங்கையிலுள்ள பிரபல மணிக்கூட்டுத் தயாரிப்பு நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டது. இந்நிறுவனத்தினூடாகச் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நான்கு மணிக்கூடுகளும் கோபுரத்தில் பொருத்தப்பட்டன.

ஆனால், தற்போது இம்மணிக்கூடுகள் பொருத்தப்பட்டுச் சிறிது காலத்திலேயே பழுதடைந்து விட்டன. இது குறித்து, மணிக்கூட்டை விற்பனை செய்த தனியார் நிறுவனத்திற்குப் பலமுறை முறைப்பாடுகள் செய்யப்பட்டபோதும் இம்மணிக்கூடுகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எனவே, இம்மணிக்கூடுகளை வாங்குவதற்கு நிதி ஒதுக்கி மேற்படி நிறுவனத்துடன் ஒப்பந்தமும் செய்த பிரித்தானிய அரசாங்கத்திற்கு முறைப்பாடு செய்யவுள்ளதாகத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ், இது குறித்து முதலில் இலங்கையிலுள்ள பிரித்தானிய தூதரகத்தில் முறைப்பாடு செய்யவுள்ளதாகவும், இவர்களும் இம்முறைப்பாட்டிற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கவில்லையென்றால், தாம் பிரித்தானிய முடிக்குரிய இளவரசர் சாள்ஸிடம் இம்மணிக்கூடுகளைத் திருத்துவதற்கு அல்லது மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கடிதம் மூலம் கேட்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ச,ரா)

# தபாலதிபர் நேர்முகத் தேர்வு ஜனவரி 7,8 ஆம் திகதிகளில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிலுள்ள தபால் நிலையங்களில் நிலவும் தபால் அதிபர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்புவதற்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் 7ஆம், 8ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வருட நடுப்பகுதியில் நடைபெற்ற சிற்றூழியர்களைப் பதவி உயர்த்துவதற்காகப் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 61 பேர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

வடமாகாணப் பிரதி அஞ்சல்மா அதிபரின் அலுவலகத்தில் நடைபெறவுள்ள இந்நேர்முகத் தெரிவுக்கான கடிதங்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச)

# நகரில் களைகட்டியுள்ள புதுவருட வியாபாரம்

(மானிப்பாய்)

யாழ்.நகரில் புதுவருடம், தைப் பொங்கல் போன்ற பண்டிகைகளை முன்னிட்டு வியாபாரம் களைகட்டியுள்ளது.

இம்முறை தென்னிலங்கை மற்றும் தென்னிந்திய வியாபாரிகள் யாழ்.நகரில் தமது வியாபார நடவடிக்கையினை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் தென்னிலங்கை சிங்கள, முஸ்லிம் வியாபாரிகள் வாகனங்கள் சகிதம் தமது உற்பத்திப் பொருட்களை யாழ்.நகரை அண்டியுள்ள பகுதிகளில் விற்பனை செய்துவருகின்றனர்.

மேலும் -

தென்னிந்தியாவிலிருந்து பெருமளவு புடவை வகைகளுடன் வியாபாரிகள் கொழும்பிலிருந்து யாழ். நகர் வரக்காத்திருப்பதாகவும் தெரியவருகிறது. (100)

## மீன்களைச் சந்தைப்படுத்த இடமில்லை

# படையினரின் பிரசன்னத்தால் கொழும்புத்துறை மீனவர் அவதி!

கொழும்புத்துறைப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள், தாம் பிடித்து வரும் மீன்களை பாஷையூர் மீன் சந்தையில் விற்பனை செய்வதற்குரிய ஏற்ற ஒழுங்குகளைச் செய்து தருமாறு அப்பகுதிப் பொது அமைப்புகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தாம் ஏற்கனவே மீன் சந்தைப்படுத்தும் பகுதியில் இராணுவக் காவலரண்கள் இருப்பதால் மீன்களைச் சந்தைப்படுத்தி வியாபாரம் செய்வற்கு வசதியில்லாமல் இருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (100)

# வலி - தெற்கில் மாமரங்களில் நோய் அழுகிப் போகும் மாங்காய்கள்

(ஊரெழு)

வலிகாமம் தெற்குப் பிரதேசத்தில் விவசாயிகளினால் நடுகை செய்யப்பட்ட மாமரங்களில் உள்ள மாங்காய்களில் பங்கசு நோய்த் தாக்கம் காரணமாக, கரும்புள்ளி பிடிக்கப்பட்டு பழமாக மாறும் காலங்களில் அழுகல் நோய்த்தாக்கத்திற்குள்ளாகி வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் பட்டினிக்கெதிரான நிறுவனம் மேற்படி நோய்த் தாக்கத்திற்கு எதிரான கிருமி நாசினிகளைக் கிராமங்கள் தோறும் பழமரச் செய்கையாளர்களது வீடுகளுக்குச் சென்று விசிறி இருந்தது.

எனினும் அதன்பின் இந் நோய்த் தாக்கத்திற்கெதிராக எந்தவித முயற்சிகளையும் விவசாய அமைப்புக்கள் மேற்கொள்ளவில்லை என பழமரச் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வருடம் உற்பத்தியான மாங்காய்களில் பெரும் பகுதி இந்நோய்த்தாக்கம் காரணமாக அழுகல் நோய்க்குள்ளாகியதால் விவசாயிகள் பெருநஷ்டத்தினைச் சந்தித்து வருவது குறிப்பிடத்தக்கது. (96)

### உருளைக்கிழங்கு பயிரில் வெண்பூச்சி நோய்

(ஊரெழு)

ஊரெழு, கரந்தன் பகுதிகளில் செய்கை பண்ணப்பட்டு வரும் உருளைக் கிழங்குகளில் வெண்பூச்சி நோய்த்தாக்கம் ஏற்பட்டுள்ளது.

இநநோயின் அறிகுறியாக இலைகள பழுப்பு நிறமாகக் காணப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (96)

### நாச்சிக்குடாவில் முஸ்லிம்கள் குடியேற்றம்

நாச்சிக்குடாப் பகுதியில் மீண்டும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்த முஸ்லீம் மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவிப் பொருட்களை வழங்கி வருகின்றது.

### சமாதான நீதிவானாக நியமனம்

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக அ.க.த. கிருஷ்ணராசா, நீதி அமைச்சானால் தீவு முழுவதுக்குமான சமாதான நீதிவான் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன யாழ்ப்பாண மாவட்ட சமாதான நீதிவானாக அவர் கடமையாற்றி வந்தார்.



இவர், கோப்பாய் அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் பொருளாளராகவும், அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களான சாந்திகம் மற்றும் நவஉதயம் ஆகியவற்றின் பொருளாளராகவும் சேவையாற்றிவருகிறார்.

### ஒளிவிழா

யாழ். வடமராட்சி மகளிர் கல்லூரியின் ஒளிவிழா இன்று காலை 10 மணியளவில் நடைபெறவுள்ளது. இவ்விழாவிற்கு பிரதேச செயலர் க.கனகரத்தினம் தலைமை தாங்குவார். (113)

### சர்வோதயம் உதவி

புன்னாலைக்கட்டுவன் தெற்கு ஜே/207 கிராமசேவகர் பிரிவுக்கு உட்பட்ட 55 விவசாயக் குடும்பங்களுக்குச் சர்வோதய நிறுவனம் மண்வெட்டி அலகு, தென்னம்பிள்ளை என்பவற்றை வழங்கியுள்ளது.

இளம் விதவைகள், வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்கள், அங்கவீனர்களை உடைய விவசாயக் குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இவை வழங்கப்பட்டுள்ளன. (கி)

### லொறியிலிருந்து வீழ்ந்து மரணம்

(வடமராட்சி கிழக்கு)

மன்னாரிலிருந்து பருத்தித்துறை நோக்கி வந்துகொண்டிருந்த லொறிக்கு மேல் இருந்த சதாசிவம் சுதாகர் (வயது 33) என்பவர், லொறி திடீரென பிரேக் பிடித்ததால், தூக்கி வீசப்பட்டு மரணமானார்.

இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை முறிகண்டியில் இடம் பெற்றது. (17)

# முகமாலைச் சோதனைச் சாவடியால் பயணிகள் நடந்து செல்ல முடியாது!

## செஞ்சிலுவைச் சங்க அதிகாரி தெரிவிப்பு

(ஊரெழு)

முகமாலை சூனியப் பிரதேசத்தில் பயணிகள் நடந்து செல்ல அனுமதி இல்லை என செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை நடந்து வந்த பயணிகளிடம் மேற்கண்டவாறு செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி தெரிவித்ததுடன் இது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள நடைமுறை எனவும் தெரிவித்தார்.

அத்துடன் அப்பயணிகளை வாகனத்தில் பயணிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார். (96)

## ஊரெழு கரந்தனில் மரக்கறிகள் திருட்டு

# இரவுவேளை கொட்டும் பனியில் காவல் செய்யும் விவசாயிகள்!

(ஊரெழு)

ஊரெழு, கரந்தன் பகுதியில் விவசாயிகளினால் நடுகை செய்யப்பட்டுள்ள கரட், கோவா, கத்தரி, பயற்றை, வெண்டி போன்ற மரக்கறிப் பயிர்கள் இரவு வேளையில் திருடர்களால் திருடப்பட்டு வருவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

தற்போது மரக்கறிகளின் விலைகள் மிக உயர்வாக இருப்பதனால் இவ்வாறு திருடர்கள் திருடி விற்பனை செய்வதாகவும், இதனால் இத்திருட்டுக்களை தடுக்க கொட்டும் பனியில் காவல் கடமைபுரிய வேண்டி இருப்பதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (96)

வாழ்க வளமுடன்


நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

இரண்டாவது அகவையில்.



பெயர் :கு.அபராஜிதன்
முகவரி:மயிலணி, சுன்னாகம்.




எட்டாவது அகவையில்.




பெயர் :ப.தணிகா
முகவரி:இராஜஸ்தலம், அல்வாய் தெற்கு.

எட்டாவது அகவையில்.





பெயர் :செ.யனுஸ்ரன்
முகவரி:பூநாறி லேன், கொக்குவில்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்


சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------


பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்




# நூல் அகம்




## சர்ப்பவியூகம்

(நூல் அறிமுகம்)

இது ஒரு சிறுகதைத் தொகுதி. சிறு கதை புறப்பட்ட இடத்திலிருந்து வெறொரு இடத்திற்குப் போய்விட வேண்டும். திரும்பப் புறப்பட்ட இடத்திற்கு வருவதில் அர்த்தம் இல்லை. போய்விட்ட இடத்தில் எவ்வளவு பகிரமுடியுமோ அவ்வளவையும் பகிரவேண்டும். வாசகனையும் சூழலையும் இரண்டறக் கலந்துவிட்டால் வாசகனுக்குத் தன்சூழல், கதைச்சூழல் என்ற இரண்டு சூழல் இல்லை என்றாகிவிடும். வாசகன் கதையுடன் இணைந்து விடுவான். இத்தகைய கதையை வாசிப்பவன் அக்கதையை ஒரு காலமும் மறக்க மாட்டான்.

இவ்விதம் கதை பண்ணுவதில் செம்பியன் செல்வன் கெட்டிக்காரர். அவருக்கு நீண்ட இலக்கிய அனுபவம் உள்ளது. நிறைய வாழ்பனுபவம் உள்ளது. இதனால் இலகுவாகக் கதைப் பின்னலை நிகழ்த்தி, வாசகனைக் கவர்ந்து இழுப்பது அற்புதமானது.

நான்கு தசாப்தங்களை வரையறுத்துக் கொண்டு தமிழ்ச் சமூகம் கொண்டுள்ள பிரச்சினைகளை அல்லது போக்குகளை சுட்டிக்காட்டியபடி கதைகள் பின்னப்பட்டு இருக்கின்றன. தொகுக்கப்பட்ட கதைகளில் உள்ள நீண்டகால இடைவெளி கதையுணர்தலில் எந்த இடையூறையும் ஏற்படுத்தவில்லை. மாறாக, செம்பியனின் ஒவ்வொரு காலகட்டப் பார்வைத் தெளிவை உணர வைக்கின்றது.

எல்லாமாக இருபத்து மூன்று கதைகள் தொகுதி நிறைந்திருக்கின்றது.

சர்ப்ப வியூகம் என்ற கதை நாம் முன்சொன்ன வாசகனையும், கதைச் சூழலையும் இணைத்து விடுகின்ற, ஒரு போர்க்குணம் கொண்ட சிறுகதை. உழைக்கும் வர்க்கம், வஞ்சகம் கொண்ட மனிதர்கள் மத்தியில் வாழ்தலுக்காகப் போராடுவதைச் சொல்லும் கதை.

இக் கதையில் இதைவிடச் சிறப்பு யாதெனில், கதையின் தொழில் நுட்பம் சிறிதும் பிசகாது இருப்பதே. தேவையான அனைத்து தகவல்களையும், விபரங்களையும் பெற்ற பின் கதை பண்ணியிருப்பது இக்கதையின் சிறப்பு.

'தகர்வு' என்ற கதை காலம் காலமாக தமிழினம் சந்திக்கின்ற மாபெரும் துயரமான காட்டிக்கொடுப்பு நிலையைச் சித்திரிக்கின்றது. அத்தோடு இந்தியாவை நம்பியவர்களுக்கு அந்தத் தவறைச் சுட்டிக்காட்டவும் செய்கின்றது. இதனைப் போலத்தான் 'காண்டீபம்' என்ற கதையும் இந்திய இராணுவத்தின் அர்த்தமற்ற போக்கினைச் சுட்டுவது.

மற்றயதாக செம்பியன் செல்வனின் வெற்றி, நியாயத்தினை உணர்த்தியமையாகும். அதில் அவர் தெளிவாக இருக்கின்றார். இதில் அவர் வழிகாட்டி, அதற்கு மேலாக முன்னோடி. ஈழத்துப் படைப்பாளி ஒவ்வொருவரும் கட்டாயம் புரிய வேண்டிய நியாயத்தினை அவர் கதைகளில் உரிய முறைப்படி வெளிப்படுத்தி இருக்கின்றார்.

இந்தப் படைப்பினைப் படிக்கும் ஒருவர், நாம் பட்ட, பட்டுக்கொண்டிருக்கின்ற துயரங்களை முழுதும் உணரமுடியும். போரிலக்கியங்கள் போதாமல் உள்ளது என்ற கருத்தில் ஒரு பகுதியை இந்நூல் நீக்கவும் கூடியது. ஈழப்போரின் முக்கிய காலகட்டமான நேரத்தில் நாம் நிற்கையில் இத்தகைய தொகுதி வந்திருப்பது வரவேற்கத்தக்க விடயம்.

இறுதியாக எல்லாக் கதைகளையும் நாம் விமர்சிக்காவிட்டாலும் வாசகனுக்கு நிறைவைத் தரக்கூடிய கதைகள் நிறைய இருக்கின்றன.

சில அதீத வெளிப்பகட்டு உத்திமுறைகளைத் தவிர்த்திருக்கலாம். அதாவது அறிந்த தகவல்கள் யாவற்றையும் புகுத்த முனைந்திருப்பது.

இருப்பினும், நிறைவைத் தரும் தொகுதி. இசங்களுக்குள் மாட்டுப்படாத நடைமுறைகளைச் சொல்லி இருக்கும் தொகுதி என்ற விதத்தில் இரசனையுள்ள வாசகனுக்கு திருப்தி தரும் என்பதில் ஐயமில்லை.

**- கோகுலராகவன்**

**இலக்கியச் சோலைக்கு வளம் சேர்க்க...**

**இலக்கிய ஆர்வலர்களே!**

உங்களிடம் இருந்து கருத்துக்களையும், ஆக்கங்களையும் "நமது ஈழநாடு" எதிர்பார்க்கின்றது.

"நமது ஈழநாடு"

இலக்கியச் சோலை

இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு உங்கள் கருத்துக்களையும் ஆக்கங்களையும் அனுப்பி வையுங்கள். தரமான ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும்.


# A-9 என நீளும் நினைவுகள்

பகுதி பன்னிரெண்டு

கோட்டை வாசலைக் குறிவைத்து முற்றுகைக்
கோடு விழுந்தது. கோட்டை முழக்கம்... 'யாழ்'
கேட்ட மகிழ்ச்சிசேர் பாட்டை அமுக்கிற்று.

கிரமமாகச் சமர்கள் தொடர்ந்தன.
போட்ட முற்றுகைச் சுருக்கு இறுகிற்று.
போகப் போக எதிர்ப்பும் வலுத்தது.
சேட்டை விடுதலைப் போல வானூர்திகள்
தினமும் வந்து நம் வானை உழுதன.

கண்டி வீதியின் ஓரத்து... இராணுவக்
காவற் கொத்தளம் யாவுமே முற்றுகைச்
சண்டை வீடுகள் ஆகி அதிர்ந்தன.
சன்னதங் கொண்ட மறவரின் சேனைகள்
நின்ற.. கொக்காவிற் கேந்திர மையத்தைக்
கெல்லினர்; தீயில் நீற்றினர்; வான்.. அலை
கொண்டு சென்றிருந்திட்டதோர் கோபுரம்
குலைய... வானொலி நமக்குத் தொலைவாச்சு!



கண்டி வீதியின் முக்கிய சந்தியில்
கதவடைத்தே இருந்தது மாங்குளம்!
'சிங்க வீரர்கள்' என்ற அணியினர்
சேர்ந்து... மிக்கப் பலமாய் அரண்களைக்
கொண்டு வன்னியின் தொண்டைக் குழியிலே
குத்தி நின்றதோர் முள்ளாய்ச் சிரித்தனர்.
சண்டைச் சங்கொலி கேட்குமுன் சுற்றத்துச்
சனங்கள் ஏதிலியாகக் கிளம்பினர்.

ஜெயங்கொண்டான்

# பாடுபொருள் புதிதாக இருப்பதே

# புதுக்கவிதை

**விக்கிரமாதித்தியன் - தமிழ் உலகம் பேர் சொல்லவல்ல ஒரு கவிஞன். வாழ்க்கையை இயல்பு மாறாமல் நுண்ணியதாய்ப் பார்ப்பவர். சர்ச்சைக்குள்ளானாலும் இவரது படைப்புக்கள் சாமான்யமானவையல்ல.**

**புதுக்கவிதை பற்றி கவிஞர் திருமேனியின் கவிதைகளூடு அவரது பார்வை இதோ..**

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

தடுப்புச் சுவரெல்லாம் இல்லவேயில்லை. அதுதான் உன்னதமான சமூகம். அங்கே ஏக்கம் இல்லை. கொந்தளிப்பு இல்லை. தன்மை நிலவியது. சாந்தம் தவழ்ந்தது. இயல்பு கெடவில்லை.

பௌத்த, சமண மதங்களின் கெட்ட பாதிப்பு ஆணையும் பெண்ணையும் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ள முடியாத தூரத்தில் கொண்டு போய் நிறுத்திவிட்டது. தொழில்மயமாவதில் தோன்றும் நகர நாகரிகம் இன்னும் தள்ளிக் கொண்டு போகிறது. இடையில் ஏற்பட்ட இந்தக் கேடுகள் இன்னும் இன்னுமென்று தொடர்கின்றன. பரஸ்பரம் அந்நியமாகிப் போய் இருப்பதே இன்றைய ஸ்திதி.

நமது சமூகச் சூழலில் எந்தப் பெண்ணிடமும் சாதாரணமாகப் பேசமுடியாது. சகஜமாகப் பழக முடியாது. சிநேகிதமாக இருக்க முடியாது. எவ்வளவோ சமூகத் தடைகள். அவை ஏற்படுத்தி வைத்திருக்கும் மனத்தடைகள். இதில் அன்பு சாத்தியமில்லை. நம்பிக்கைக்கு இடமில்லை. புரிந்து கொள்ளும் வழிகள் அடைபட்டுப்போயின. தனித்தனியாக நகரும் வாழ்வு, கள்ளம் கபடம் இல்லாமல், தன் இயல்புக்கு இருக்க வேண்டிய ஆணும் பெண்ணும் இப்படித் திரிந்து போயிருப்பது அவலமானது, கொடுமையானது.

கவிஞனின் சூட்சுமமான மனம் வாழ்வின் இருப்புகளை எளிதில் உணர்ந்து கொள்கிறது. சமச்சீரான தன்மைகளைக் குலைத்து விடும் அபாயம் கொண்டவற்றைப் பார்த்துக் கவலைப்படுகின்றது. அழகுகளும் அருமைகளும் அழிந்து கொண்டிருப்பதற்காகத் திடுக்கிடுகிறது. இதெல்லாம் சரியில்லையென்று பொங்கியெழுகிறது. நாலு பேரிடம் சொல்லி ஆற்றாமைப்படுகிறது. இந்த பரிதவிப்புத்தான் இது கவிதை.

திருமேனி புத்திசாலி. மிகச சிடுக்கான ஒரு விஷயத்தை,



கொஞ்சம் பிசகினாலும் தப்பாகி விடுகிற ஒன்றைச் சரியாகக் கொண்டு வந்திருக்கிறார். பூடகமாகப் பேசியிருப்பதைப் புரிந்து கொண்டால் கவிதை சொல்வது விளங்கும். ஒரு சோகக் காட்சியினூடே வாழ்க்கைச் சிக்கலை முன் வைத்து நமது கவனத்தை ஈர்க்கிறார்.

வெள்ளம் போல வரும் புதுக்கவிதைக் கூட்டத்திலிருந்து வெகுவாக வேறுபட்டது இந்தக் கவிதை. காட்சியாக நின்று விடாது கவிதையாகி இருப்பதே இதன் வெற்றி. நல்ல கவிஞன் எதைச் சொன்னாலும் அதைக் கவிதையாக்கி விடுவான் என்பதற்குச் சாட்சியமாக விளங்குவதும்கூட இது கவிதை. இந்த ஒரு கவிதையிலேயே உயர்ந்த கவிஞனாகி விட்டார் திருமேனி.

'எழுத்து' காலத்திலிருந்து, 'கசடதபற', 'ழ' காலங்களிலிருந்து மாறுபட்டு, இப்போது நவீன கவிதை சரியான திசையில் போய்க் கொண்டிருப்பதற்கு இது போலக் கவிதைகளையே எடுத்துக்காட்டாய்க் காண்பிக்க முடியும். புதுக்கவிதை இன்றைய தினம்தான் உள்ளபடியே புதுக்கவிதையாக இருக்கிறது என்பற்கும் இது மாதிரிக் கவிதைகளே போதுமான ஆதாரம்.

பூமியில் கால் பரவாமல், அத்துவானவெளியிலேயே திரிந்து கொண்டிருந்த நவீன கவிதை இப்போதுதான் புழுதிக்கு வந்திருக்கிறது. வேதாந்த விசாரம், காலவெளி விசாரம், காற்றைத் துழாவும் கவிதைப் போக்கெல்லாம் இனி உதிர்ந்து போகுமென்று எதிர்பார்க்கலாம். இனிமேல் கவிதை இந்த வாழ்வின் நிலைகளைச் சொல்லும்.

என்னவோ இருக்கிறது என்ற சித்து விளையாட்டெல்லாம் இல்லாமல், இருப்பதைச் சொலலும் கவிதை, பொறுப்புள்ள இளைஞர்கள் கைக்கு வந்துவிட்டதே நம்பிக்கை தருவதாக இருக்கிறது.

✻

# கூண்டில்

## சிறுகதை

**ந.சத்தியபாலன்**

தெருப்படலை திறந்து மூடப்படும் ஓசையும் அதைத் தொடர்ந்து தொண்டையைச் செருமி உமிழும் ஓசையும் கேட்கின்றன.

அப்பாதான் வருகிறார் என சதானந்தன் புரிந்து கொள்கிறான்.

வீட்டு முற்றத்தில் பெரும் பரப்பை, நிழலால் மூடி நின்ற மாமரத்தின் அருகில் கதிரையொன்றில் அமர்ந்திருந்த சதானந்தன் உள்ளே சென்று இன்னுமொரு கதிரையைக் கொண்டு வந்து வெளியே வைத்துவிட்டு அமர்கிறான்.

வீட்டின் உள்ளே நுழையப் போன நல்லையரை "என்னவாம் அவையள்...?'' என்ற கேள்வி தடுத்து நிறுத்தியது.

"ம்...." என்றபடி அவனருகே யிருந்த கதிரையை இழுத்துப் போட்டு அமர்ந்து கொள்கிறார்.

சில வினாடிகள் மௌனத்தில் கரைகின்றன.

"கொஞ்சம் பஞ்சிப்படுகினம் போல கிடக்கு" நல்லையரின் குரல் தளர்ச்சியுடன் மெலிந்து ஒலிக்கிறது.

"ஏனாம்... என்ன பிரச்சினையாம்...?"

சதானந்தனின் குரலில் அதிர்ச்சி தெரிகிறது.

"ரெண்டு பேருக்கும் ஒரே வயதெண்டதால தகப்பனுக்கு அவ்வளவு விருப்பமில்லையாம்...

பிள்ளையைப் பார்க்க இன்னும் கூடின வயதுப் பொம்பிளபோல கிடக்குதாம்... தரகர் சொல்லுறார்."

சதாவுக்கு குரல் எழவில்லை. மனது குமுறுகிறது.

கண்முன் விரியும் யதார்த்தம் முகத்திலறைகிறது. "அவங்களுக்குப் பெரும் நினைப்பு...

கேட்டபடி சீதனத்துக்கெல்லாம் ஓம் சொன்ன பிறகும் இப்பிடிக் கதைக்கிறாங்கள்..."

நீண்ட நாட்களுக்குப் பிறகு பேசிவந்து எல்லாம் பொருந்தி வருகிறதென்ற திருப்தியைத் தந்த இடத்தில் இப்படி ஒரு சிக்கலா...?

கவலை தோய்ந்த குரலுடன் சதானந்தன் தொடர்கிறான்.

"எங்களிலதான் பிழை... அதை அதை அந்தந்தக் காலத்தில செய்ய வேணும்...

தேடி வந்த காலங்களை விட்டிட்டம்... இப்ப யோசிக்கிறம்..."

"எங்களில் என்ன பிழை...? எல்லாம் சரியா வரவேணாமே...?"

நல்லையர் வழமைபோல் தனது நியாயங்களோடு..

"எல்லாம் சரியா வரட்டுமெண்டு பாத்ததிலதான் இந்த நிலை...

இதுக்கு முன்னை எத்தின இடம் கேட்டு வந்தது.

எல்லாத்திலும் நொட்டை சொல்லி ஓட்டை பாத்து கடைசியில இப்பிடி ஆச்சுது"

குற்றம் சுமத்தும் தொனியில் சொல்கிறான் சதானந்தன்.

"கேட்டு வந்ததெண்டு போட்டு... கண்ட இடத்திலும் சம்பந்தம் பேச ஏலுமா..."

"எங்கட தகுதி தராதரங்களைக் கைவிடச் சொல்லுறியா...." மகனைக் கொதிப்புடன் கேட்கிறார் அவர்.

சினம் பொங்கக் கதிரையைப் பின்னே தள்ளி விட்டு எழுகிறான் சதா.

"இப்பவும் தகுதி தராதரம் தான் பாக்கிறியள்... வீட்டோட இருக்கிற பிள்ளையளின்ர மனம் உங்களுக்கு விளங்கேல்ல.."

"வாழவேண்டிய ரெண்டு பொம்பிளப் பிள்ளையள் காலங்காலமாக் காத்துக் கொண்டிருக்கிறது தெரியேல்ல... வட்டிக் கணக்கும் சீட்டுக் காசும்தான் உங்கட உலகம்...."

"அம்மா இருக்கிற காலத்திலயே எத்தின சம்பந்தத்தை நீங்கள் திருப்பி அனுப்பியிருக்கிறியள்...

சொந்தம் விட்டுப் போகக் கூடாது எண்டு பழைய கோபம் மறந்து தேடி வந்த மாமியின்ர மகனையும் வேணாமெண்டிட்டியள்...

அக்கா ஆசைப்பட்ட மாதிரி அந்த நகுலனையாவது செய்து வச்சிருக்கலாம். அவன்ர குடும்பத்தில குறை பார்த்து அதையும் கெடுத்துப் போட்டியள்"

அப்பிடியெண்டால்... பிழை என்ரதான் எண்டு சொல்லுறியா...?"

"பின்ன ஆற்றை.. உங்கட பிடிவாதத்திலதான் எல்லாம் கைவிட்டுப் போனது.." சதானந்தன் குமுறினான்.

"அவளுக்குக் காலம் சரியில்ல... சரியாயிருந்திருந்தால் எல்லாம் கூடி வந்திருக்கும்..."

நல்லையர் சொன்னதைக் கேட்க சதானந்தனின் கோபம் எல்லை மீறியது.

"காலத்தில பழி போடாதேங்கோ...

அக்காவுக்குத் தாய் தேப்பன் சரியில்லை.. பொறுப்போட அக்காவின்ர வாழ்க்கையைப் பற்றி ஆருமே யோசிக்கேல்ல... உங்களுக்கு உங்கட தேட்டம் கை மாறிப் போகுமெண்ட கவலை..."

கோபத்தின் உச்சியிலிருந்தான் சதானந்தன். அந்த இரவு வேளையில் அவனது சத்தம் மிகப் பெரிதாய் ஒலித்தது.

சத்தம் கேட்டு நிர்மலாவும் குமுதாவும் வெளியே ஓடிவந்தார்கள்.

"எட தம்பி.. சதா இதென்ன கதைக்கிறாய்... உங்கள் ரெண்டு பேருக்கும் என்ன விசரா பிடிச்சிருக்கு...?

....எனக்குக் கலியாணம் குழம்பிறது என்ன புது விஷயமே.. அதுக்கேன் நீ கிடந்து புலம்பிறாய்...

...என்ர



தலைவிதிக்கு ஆர் என்ன செய்யேலும்..? அழுகையில் உடைந்தாள் நிர்மலா.

"ரெண்டு பேரும் முதலில உள்ளுக்க வாங்கோ, அயல் அட்டம் என்னவோ ஏதோ எண்டு இஞ்ச ஓடிவரப் போகுது"

குமுதா நல்லையரையும் சதானந்தனையும் உள்ளே அழைத்துப் போனாள்.

உள்ளே வந்த நல்லையர் தன் மீது சுமத்தப்பட்ட பழியின் கூர்மை தாளாமல் அரற்றினார்.

"...நீ சொல்லு பிள்ளை... எனக்கு உன்ர நல்வாழ்க்கையில அக்கறையில்லையா...

இவன் என்னில இப்பிடிப் பழி சொல்லலாமா பிள்ளை" என்று தழுதழுத்தார்.

"ஐயோ... அப்பா நீங்கள் ஏன் கவலைப்படுகிறியள். உங்கட பிழையுமில்லை. அம்மாட பிழையுமில்லை. அது என்ர தலைவிதி.. என்ர பிழை.."

துயரம் தாளாமல் தலையில் அடித்துக் கொண்டு அழுதாள் அவள்.

அவள் மனதில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் அவளது அம்மா இறந்து போவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் நகுலன் கேட்டது ஞாபகம் வந்தது.

" இஞ்ச பாருங்கோ நிர்மலா... நியாயம் விளங்காத உங்கட வீட்டுக்காரரைப் பார்த்துக் கொண்டிருந்தால் உங்களுக்குக் கலியாணமே நடக்காமல் போயிடும்"

எல்லா விதத்திலும் விட்டுக்குடுத்து நாங்களா வந்து உங்கள எனக்கு கட்டித் தரச் சொல்லிக் கேட்டும், உங்கட அப்பா மாட்டனெண்டு நிக்கிறார்.

எங்கையோ தேடிப் பிடிச்சு எங்கட அப்பாவின்ரை பரம்பரையில ஆரோ ஓடிப்போனதைக் காரணம் காட்டி இந்தச் சம்பந்தத்தையும் முறிச்சுப் போட்டார்...

இப்பவும் சொல்லுறன்... நீங்கள் எனக்குத் துணையா அமைஞ்சால் என்ர வாழ்க்கை சந்தோஷமாய் அமையும் எண்டு நான் திடமாய் நம்புறன்...

உங்களுக்கும் என்ர அன்பு புரியாமலில்லை...

அப்பா அம்மா ஊர் உலகம் எண்டு பார்த்துக் கொண்டு நிக்கிறியள்.

நீங்கள் சம்மதிச்சால் நாளைக்கே ரெண்டு பேரும் ரிஜிஸ்ரர் செய்து கொள்ளலாம். நான் உறுதியா முடிவெடுத்துத்தான் இதச் சொல்லுறன்.."

நகுலனின் இந்தப் பேச்சைக் கேட்டு அவளுக்கு மனம் நடுங்கியது.

அவன் சொல்லுறபடி நடந்தால் ஏற்படக்கூடிய விளைவுகளை ஒரு தடவை நினைத்துப் பார்த்தாள்.

அவளால் அதைக் கூடத் தாங்க முடியவில்லை.

"ஐயோ... நகுலன் என்னால அது முடியாது... தயவு செய்து என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ... உங்கட அன்பு எனக்கு விளங்காமலில்லை... ஆனால் அதுக்கு நான் குடுத்து வைக்கேல்ல...

நீங்கள் ஆரையெண்டாலும் கலியாணம் செய்து சந்தோஷமாய் இருக்க வேணும்.

என்னை இதில வற்புறுத்தாதேங்கோ.. என்னை மன்னிச்சிடுங்கோ..."

கதறி அழுகின்ற அவளை மௌனமாகப் பார்த்திருந்து விட்டுக் கண்களைத் துடைத்தபடி போனான் நகுலன்.

அதற்குப் பிறகு அம்மாவின் நோய் அதிகரித்துப் படுத்த படுக்கையானதும் இரண்டே மாதங்களில் அம்மா இறந்ததும் கனவு போல் தெரிகிறது கண்ணில்.

யோசனை கலைந்து தன் நிலைகுத் திரும்பிய நிர்மலா மெல்ல எழுந்தாள்.

நல்லையர் கண்களை மூடியபடி சாய்மனைக் கதிரையில் சாய்ந்திருந்தார்.

சதானந்தனை அந்த இடத்தில் காணவில்லை. குமுதா ஒரு கதிரையில் அமர்ந்து சுவரை வெறித்துப் பார்த்தபடியிருந்தாள்.

கனமான ஒரு மௌனம் அந்த இடத்தை மூடியிருந்தது. ✲

---

# முன்பு ஒரு காலம்

புத்திரனே,
முன்பு ஒரு காலம் இருந்தது
சிரிப்பினில் இதயமும் கண்களும்
இணைந்தன.
ஆனால் இன்று
பற்களால் மாத்திரம் சிரிக்கையில்
அவர்களில் இறுகிப்போன கண்கள்
என் நிழலில் எதையோ
தேடுகின்றன.
உண்மையில் ஒரு காலம்
இருந்தது.
எல்லோரும் தம் கைகளை
உள்ளன்புடன் குலுக்கினர்
போனது போனதுதான் மகனே!
இப்போது உள்ளன்பு அற்றுப்போன
குலுக்கல்கள்.
அவர்களது இடதுகரம்
எனது வெறும் சட்டைப் பையில்
எதையோ தேடுகிறது.
அவர்கள் என்னை ஒருமுறை வரவேற்று
உம் வீடு போன்று எண்ணி
மீண்டும் வருமாறு அழைத்தனர்.
இரண்டாம் முறையும் பரவாயில்லை
மூன்றாம் முறை
கதவு தாளிடப்பட்டிருந்தது.

நான் நிறைய கற்றாயிற்று ~ புத்திரனே
ஆடைகள் போன்று முகங்களையும்
அணிவேன்.
வீட்டில் ஒரு முகம் ~
அலுவலகத்தில் இன்னொரு முகம் ~
வீதியில் ஒரு முகம் ~
விருந்தில் ஒரு முகம் ~
வரையப்பட்ட சித்திரம்போல்
ஆனேன்.

இப்போது நானும் கூட
இதயத்தை தொலைத்து விட்டு
கைகளைக் குலுக்கி ~ வெறும்
பற்களால் சிரிக்கின்றேன்.
தொலைந்தது தொந்தரவு என்றெண்ணி
பிரியாவிடை பகர்கின்றேன்.
மகிழ்வது போல் காட்டி வரவேற்று
சலிப்புத் தந்த பேச்சினை
சந்தோசம் என்கின்றேன்.

என்னை நம்பு புத்திரனே
தொலைந்து போன இருப்பை
நான் தேடிக் கொண்டிருக்கின்றேன்.
மனிதம் அற்ற செயல்களை மறந்து ~
பாம்புப் பற்களைத் தொலைத்து ~
மீண்டும் ஒரு குழந்தையாய்
மாறிவிட.
சிரிக்கக் கற்றுக் கொடு புத்திரனே!
முன்பு ஒரு காலம்
நான் இருந்தது போல.



ஆங்கிலத்தில் – கபீரியல் ஒகாரா
(Gabriel Okara)
தமிழில் – ஜீ.ஆர்.ஜி.ரங்கன்

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

பேதமை என்பதுஒன்று யாதுஎனின் ஏதம்கொண்டு
ஊதியம் போக விடல்

-திருக்குறள்

## நமது நோக்கு

## அழிவைத் தேடும் பாதை!

உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்தி, அவர்களது வாழ்வில் சுமுகநிலையை ஏற்படச் செய்வதற்கான முயற்சிகள் - இராணுவத் தரப்பின் நிபந்தனைகளால் பாதிக்கப்பட்டிருப்பதோடு, இந்த விவகாரம் - அமைதிக்கான நகர்வுகளிலும் இறுக்கமான நிலையொன்றை உருவாக்கியிருக்கும் நிலையில் -

எரியும் தீயில் எண்ணெய் ஊற்றுவதான செயற்பாடு களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீவிரமாக இறங்கியிருக்கிறார்.

ஒருபுறம் - இந்த இறுக்க நிலையைத் தளர்த்துவதற்காகவும் , விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடி ஆவனவற்றைச் செய்யும் நோக்கிலும்- அர சாங்கம், சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் பேனாட் குணதிலகவை வன்னிக்கு அனுப்பவிருப்பதாக அறிவிப்பு வெளியாகியிருக்கும் நிலையில் -

மறுபுறம் - இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவையும், யாழ்.பிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவினையும் அழைத்துப் பேசிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - நிபந்தனைகள் விதித்த சரத் பொன்சேகாவைப் பாராட்டியதோடு - இந்தக் கடும் போக்கினையே தொடர வேண்டுமென அறிவுரையும் செய்துள்ளார்.

சமாதானத்துக்கான முயற்சிகளின் மீது தொடர்சசியாக- அதிருப்தியைத் தெரிவித்துவரும் ஜனாதிபதி சந்திரிகா, தற்போது ஒருபடி மேலே சென்று- அமைதியைப் பாதிக்கும் விவகாரங்களில் தனது நேரடித் தலையீட்டை ஆரம்பித்துள்ளார்.

உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான பிரச்சினையைத் தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு, அமைதி முயற்சிகளைக் குழப்பும் தனது தந்திரோபாய நடவடிக்கைகளுக்கு - இராணுவத்திலுள்ள கடும் போக்காளர்களின் ஆதரவையும் பெற்றுக்கொள்வதில் அவர் மிகத் தீவிரமாக இறங்கியிருக்கிறார் என்பது உறுதியாகியுள்ளது.

இராணுவ நலனிலோ அல்லது "தேசத்தின் ஒருமைப் பாட்டிலோ" அக்கறை கொண்டு அவர் இத்தகைய ஆதரவை வழங்குகிறார் என செய்திகள் வெளியாகி இருந்தாலும் -

உண்மையில் அவரது இத்தகைய நடவடிக்கைகளுக்கு பின்னுள்ள இலக்குகள் பற்றியும் ஆராயவேண்டியது அவசியமாகிறது.

சர்வதேச ரீதியாக - வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வந்த சமாதானப் பேச்சுக்கள், ஜனாதிபதி சந்திரிகாவை எவ்வகையிலும் முக்கியத்துவப்படுத்தாததாலும் -

விடுதலைப்புலிகள் தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக பலமான நிலையில் அங்கீகாரத்துடன் இப் பேச்சுக்களில் பங்கேற்று வருவதும் - அவரைப் பெருமளவுக்கு பாதித்திருப்பதை அண்மைக்கால அவரது நடவடிக்கைகள் எடுத்துக் காட்டியிருந்தன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவி வகித்தபோதும் - அவரது அதிகார வரம்புகளைப் பொருட்படுத்தாத வகையில் சமாதானம் நிலை பெற்று விடுமோ என்ற அச்சமும், இதனூடாக தனது அரசியல் வாழ்வு மதிப்பிழந்து விடும் என்ற கவலையும்- ஜனாதிபதி சந்திரிகாவிடம் வெகுவாகவே வேரூன்றியிருந்தன.

இந்த நிலையில் சமாதான முயற்சிகளுக்கு பாதிப்பை/ பின்னடைவை / முட்டுக்கட்டைகளைப் போடுவதன் மூலம் தனக்காதாயமான அரசியற் சூழலை ஏற்படுத்துவதில் அவர் மிகத் தீவிரமாக இறங்கியிருந்தார்.

ஜே.வி.பியுடனான கூட்டு, தமிழ்க்குழுக்களுடனான உறவு, இந்தியாவுடன் நெருக்கம் மற்றும் விசுவாசம், நோர்வே மீதான எதிர்ப்பு என்பவற்றுடன் ஆளும் ஐக்கிய தேசிய முன்னணியில் பிரதமர் ரணிலுக்கு எதிரான அதிருப்தியாளர்களுடனான தொடர்பு என - அவரது நடவடிக்கைகள் அமைந்திருந்தன.

ஒரு வழியில் சமாதானத்திற்கு எதிரான நோக்குகளுடனும், மறுவழியில் - மீண்டும் நாடாளுமன்ற ஆட்சியதிகாரத்தையும் தனக்குள் எடுத்துக்கொள்ள மாற்று அரசாங்கம் என்ற ரீதியிலும் அவரது இலக்குகள் இருந்து வருகின்றன.

இத்தகைய நிலையில் உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு இராணுவத்தரப்பு விதித்த நிபந்தனைகளும் பிடிவாதப் போக்கும் - அவருக்குத் தனது தந்திரோபாயத்தை விரிவுபடுத்துவதற்கு உதவியிருக்கின்றன.

எவ்வித நியாயப்பாடுமற்ற நிபந்தனைகளால் ஏற்பட்டுள்ள இறுக்கமான சூழலை, மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் - சம்பந்தப்பட்ட படைத் தளபதிகளை அழைத்து அவர்களது போக்கிற்கு தனது 'ஆசீர்வாதத்தை' ஜனாதிபதி சந்திரிகா வழங்கியுள்ளார்.

இக்குறுகிய நோக்குக் கொண்ட முன்யோசனைகள் ஏதுமற்ற நடவடிக்கை - 'மூக்குப் போனாலும் பரவாயில்லை, எதிரிக்குச் சகுனம் பிழையாகவேண்டும்' என்பதுபோல - தனது அரசியல் சுயலாபத்துக்காக நாட்டின் அமைதிக்கான இறுதிச் சந்தர்ப்பத்தையே அழித்துவிட முயல்வதாக ஜனாதிபதி சந்திரிகாவின் முயற்சிகள் அமைந்துள்ளன.

# உலகோடு ஒத்திசையும் புலிகளின் சாமர்த்தியம்



உலகின் பார்வையில் ஆயுதம் ஏந்தியவர்கள் ஆயுதம் எடுத்ததற்கான காரணம் தெளிவாகத் தெரியும்போது - அந்தக் காரணங்களுக்கு ஏற்ப, அவர்கள் எதிர்க்கப்பட்டார்கள்; அழிக்கப்பட்டார்கள் அல்லது புரிந்துகொள்ளப்பட்டார்கள்; பாராட்டப்பட்டார்கள் -

இது உலகம் முழுவதிலும் 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதிக்கு முன்னர் இருந்த நிலைமை. அப்போது உலகின் பார்வையில் வர்க்கப் போராட்டத்திற்கும், சமுதாயப்போராட்டத்திற்கும், சுதந்திரப்போராட்டத்திற்கும், வெறும் வன்முறைக்கும் வித்தியாசம் இருந்தது.

ஆனால், செப்ரெம்பர் 11ஆம் திகதிக்குப் பின்னர், அமெரிக்கா அந்த நிலைமையைச் சாமர்த்தியமாக, தனக்குச் சாதகமாக மாற்றிக் கொண்டுவிட்டது. அதன்படி நிலைமை எப்படி மாறிப்போனது என்றால், ஆயுதங்களுடன் சம்பந்தப்பட்ட எந்தவொரு நடவடிக்கையும் - அந்த நடவடிக்கை ஒரு நாட்டின் உத்தியோகபூர்வமான அரசாங்கத்தால் எடுக்கப்படாவிட்டால், அது வன்முறை.

அந்த ஆயுத நடவடிக்கை சுதந்திரப் போராட்டமாக இருக்கட்டும் - உரிமைப் போராட்டமாக இருக்கட்டும். இல்லை, தற்பாதுகாப்பு நடவடிக்கையாக இருக்கட்டும். எல்லாவற்றுக்கும் செப்ரெம்பர் 11 ஆம் திகதிக்குப் பின்னர் அமெரிக்கா கொடுத்த பெயர், ஒன்றே ஒன்று தான். அந்தப் பெயர் வன்முறை.

அமெரிக்காவுக்கு உலக அளவில் இருக்கும் செல்வாக்கும், சொல்வாக்கும் காரணமாக இந்த **Simple classiffication** ஐ உலக நாடுகள் எல்லாமே ஏற்றுக்கொண்டுவிட்டன என்பதுதான் - வருத்தமான ஆனால், மறுக்கமுடியாத உண்மை.

இதனால், அமெரிக்காவுக்கு என்ன நன்மை? அமெரிக்காவுக்கு உலகம் முழுவதும் ஆங்காங்கே தட்டி வைக்க வேண்டிய நிலையில் பலர் இருக்கிறார்கள். அப்படி அமெரிக்கா, "ஒரு கைபார்க்க வேண்டிய" நிலையில் இருக்கும் பலரில் அல்லது பல அமைப்புக்களில், அவர்கள் ஆயுதம் தூக்கியதுக்கான காரணம் - ஒரே காரணமல்ல.

நாட்டுக்கு நாடு, அமைப்புக்கு அமைப்பு வேறு வேறு காரணங்கள். இதனால் இவற்றில் அமெரிக்கா கை வைக்க முயலும் போது, வேறு வேறுவிதமான எதிர்ப்புக்கள், வேறு வேறு திசைகளில் இருந்து வரலாம். அதனால் அமெரிக்காவுக்கு வெற்றி பெறுவது கஷ்டம், வீண் சங்கடங்கள் தான் மிஞ்சும்.

இந்த நிலையைத் தவிர்ப்பதற்கு என்ன செய்யவேண்டும்? அமெரிக்கா அடிக்கவேண்டிய அமைப்புக்களுக்கெல்லாம், ஆயுதம் ஏந்தவேண்டிய வேறு வேறு காரணங்கள் இருக்கின்றன என்பதை மாற்றி- ஆயுதம் தூக்கியவர்களுக்கெல்லாம் ஒரே ஒரு காரணம் வன்முறையிலுள்ள ஈடுபாடு தான், என்பதை ஸ்தாபிக்க வேண்டும்.



ஆர்மிரேஜ்

அதன் பின்னர் யாரை அடித்தாலும், வேறு யாரும் ஏன் என்று கேட்கமாட்டார்கள். இந்த நிலைமையை உலக அளவில் செப் ரெம்பர் 11 ஆம் திகதிக்குப் பின்னர், அமெரிக்கா சாமர்த்தியமாக உருவாக்கியது.

அந்த நிலைமைதான், இப்போது உலகிலுள்ள நிலைமை. போகும் போக்கில், இந்த நிலைமைதான் அடுத்து வரும் பத்து, பதினைந்து ஆண்டுக்காவது, மாறாமல் தொடரவே சந்தர்ப்பம் இருக்கிறது.

இதனால் பாதிப்பு யாருக்கு என்றால், வனமுறை மீது ஆர்வம் கொண்ட ஒரே காரணத்திற்காக, ஆயுதம் எடுக்காமல; பொது நலத்துக்காகவோ; உரிமைப்போராட்டங்களுக்காகவோ ஆயுதம் ஏந்த வேண்டிய கட்டாயத்தால் ஆயுதம் ஏந்திய போராளி அமைப்புக்களுக்குத்தான் பாதிப்பு.

அந்த வகையில் ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவிலுள்ள பல அமைப்புக்கள் பாதிக்கப்பட்டன. இதில் சோகமான விடயம் என்னவென்றால், ஈழத் தமிழர்களின் ஆயுதம் தாங்கிய சுதந்திரப்போராட்டமும், தவிர்க்க முடியாதபடி இந்த வகைப்படுத்தலுக்குள் வந்து சேர வேண்டிய கட்டாயம் உலக அரங்கில் உருவாக்கப்பட்டது.

இதில் சந்தோசமான விடயம் என்னவென்றால், செப்ரெம்பர் 11 ஆம் திகதிக்குப் பின்னர் உலக அரங்கில் உருவாக்கப்பட்ட பாதகமான நிலையைப் புரிந்து கொண்டு தனக்குச் சாதகமான சூழ்நிலையாக - புத்திசாலித்தனமாக மாற்றிய அமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பு.

*"இன்றைய உலக நிதர்சனத்தை, அதன் யதார்த்தப் புறநிலைகளை - நாம் உதாசீனம் செய்யமுடியாது. இன்றைய காலத்தையும் இக்காலத்தில் கட்டவிழும் சூழலையும் நாம் ஆழமாகப் புரிந்து, காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப எமது விடுதலைப் பாதையைச் செப்பனிடுவது அவசியம்.*

*உலகப்போக்குடன் முரண்படாது, உலக வரலாற்றின் ஓட்டத்திற்கு இயைபாக நாமும் எமது போராட்ட வரலாற்றை முன்னகர்த்திச் செல்வதே விவேகமானது."*

**- வே.பிரபாகரன் .**

செப்ரெம்பர் 11ஆம் திகதிக்குப் பின்னர் சர்வதேச ரீதியில் ஆயுதப் போராட்டங்களுக்கு முற்றுமுழுதாகப் புதிய வியாக்கியானம் அமெரிக்காவால் உருவாக்கப்பட்டு, அது உலக அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கு இருந்த தெரிவுகள் இரண்டு.

முதலாவது, உலகின் போக்கையும் சர்வதேச நிலைப் பாட்டையும் பற்றி கவலைப்படாமல் விட்டுவிடுவது.

இரண்டாவது, உலகின் போக்கிற்கு ஏற்ற விதத்தில், தனது போராட்டமுறையை மாற்றிக் கொள்வது.

இந்த இரண்டு தெரிவுகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் தேர்ந்தெடுத்தது இரண்டாவது.

*"போருக்கு ஓய்வு கொடுத்துச் சமாதான வழியில், சமரசப் பேச்சுக்கள் வாயிலாக, எமது மக்களின் இனப்பிரச்சினைக்குத தீர்வு காணும் முயற்சியில் நாம் ஈடுபட்டு வருகின்றோம்.*

*நாம் வன்முறையில் பற்றுக்கொண்ட போர் வெறியர் என்றும், சமாதானத்தின் விரோதிகள் என்றும், காலங்காலமாகச் சிங்களப் பேரினவாதிகள் மேற்கொண்டு வந்த - பரப்புரையைப் பொய்யாக்கும் வகையில் நேர்மையுடனும் உறுதியுடனும் சமாதான வழிமுறையில் தழுவி நிற்கின்றோம".*

**- வே.பிரபாகரன்**

இந்த இடத்தில் உங்களுக்கு வேறொரு சந்தேகம் ஏற்படலாம். அமெரிக்காவுக்கும் இலங்கையில் நடைபெறும் யுத்தத்துக்கும் என்ன 'சம்பந்தம்? அல்லது அமெரிக்கா தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு எதிராகத் தீர்ப்புக் கூறிய சந்தர்ப்பம் எப்படி வரலாம்? என்ற சந்தேகம் உங்களுக்குத் தோன்றலாம்.



அது நியாயமான சந்தேகம்தான். இன்றைய திகதி வரை அமெரிக்கா நேரடியாக - உத்தியோகபூர்வமாக தனது தலையை இலங்கை விவகாரத்துக்குள் போர் என்ற ரீதியில் நுழைக்கவில்லை.

ஆனால், அமெரிக்கா இன்றிருக்கும் நிலையில் அப்படிப்பட்ட சந்தர்ப்பம் ஒன்றை, அதாவது இலங்கை விவகாரத்தில் நேரடியாகத் தலையை நுழைக்க வேண்டிய சந்தர்ப்பம் ஒன்றைத் திட்டமிட்டுத் தயாராக வைத்திருக்கும் என்பதை ஊகிக்க முடியும்.

இந்தச் சாத்தியத்தைச் சும்மா நாம் பேச்சுக்காகச் சொல்லவில்லையென்பதைப் புரிந்து கொள்ளவேண்டும் என்றால், 2001 செப்ரெம்பர் 11ஆம் திகதிக்குப் பின்னர், அமெரிக்காவுக்குப் பாதகமான சூழ்நிலை நிலவும் சில நாடுகளைப்பற்றியும் அங்குள்ள நிலவரங்களைப் பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் இருந்து அதிக தொலைவில் இருக்கும் அமெரிக்காவுக்கு, இலங்கையில் இருந்து அதிக தொலைவில் இல்லாமல் அருகே அமைந்திருக்கும் சில நாடுகளிலுள்ள பாதகமான நிலைகளும், அந்த நாடுகளும்-

**பாகிஸ்தான் -**

சமீப காலமாகக் கராச்சியில் நடைபெற்ற வெடிகுண்டுத் தாக்குதல்கள்- பல அமெரிக்கர்களையும், வேறு மேலைத் தேசப் பிரஜைகளையும் இலக்காக வைத்து நடாத்தப் பட்டவை என்பது நிரூபணமாகியுள்ளது.

இதுதவிர, வெளிநாட்டுத் தூதரகக் கட்டடங்களையும், வெளிநாட்டவர்களது அசையும் அசையாத சொத்துக்கள் மீதும் தாக்குதல்கள் நடைபெறலாம் என்ற சாத்தியமும் கராச்சியில் உண்டு.

பாகிஸ்தானில் இருக்கலாம் என்று நம்பப்படும் தீவிரவாத அமைப்பினர் தலிபான் மற்றும் அல்கெய்டாவைச் சேர்ந்தவர்கள். இவர்களது இருப்பிடங்கள் அல்லது மற்ற விடயங்கள் பற்றிய உறுதியான தகவல்கள் சி.ஐ.ஏ.யிடம் இருந்த போதிலும் அதனால் பெரிதான பலன் எதுவும் இல்லை.

அதற்குக் காரணம், இவர்களில் பலர் பாகிஸ்தானுக்குள் நுழைந்த லட்சக்கணக்கான அகதிகளோடு அகதிகளாக கலந்து போயிருக்கிறார்கள். இதுதவிர சந்தேக நபர்களைப் பாகிஸ்தானுக்குள் வைத்துக் கைதுசெய்ய, சி.ஐ.ஏ பாகிஸ்தானின் உள்ளூர் உளவுத்துறையை நம்ப வேண்டிய கட்டாயம் வேறு இருக்கிறது.

பாகிஸ்தான் என்னதான், அமெரிக்க சார்பு நிலையை வெளியில் காட்டிக் கொண்டாலும், அல்கெய்டா மீது ஒரு மென்போக்கு பாகிஸ்தானுக்கு இருப்பது அமெரிக்காவுக்கு நன்றாகவே தெரியும். அத்துடன் பாகிஸ்தானின் உளவுத் துறையில் பல அல்கெய்டா அனுதாபிகள் இருப்பதும் அமெரிக்காவுக்கு ஒரு "மைனஸ் பொயின்ற்"

சுருக்கமாகச் சொன்னால் அமெரிக்காவின் எதிர்ப்புக்கு, எதிர்ப்புத் தெரிவிக்க நேரடியாகச் செயலில் இறங்கமுடியாத சங்கடமான - ஆனால் இன்றைய நிலையில் அபாயமான இடம் பாகிஸ்தான்.

**ஆப்கானிஸ்தான் -**

அமெரிக்காவுக்குப் பாகிஸ்தானில் இருப்பது போன்ற, நேரடியாகச் செயற்படமுடியாத சங்கடம் ஆப்கானிஸ்தானில் இல்லை என்பது உண்மைதான்.

காரணம் அமெரிக்கப்படைகள் பெருமளவில் ஆப்கானிஸதானில் இருக்கின்றன. சந்தேக நபர்களின் இருப்பிடம் தெரிந்தால், உடனே தாக்குதல் நடத்த முடியும். ஆனால் சிக்கல் என்னவென்றால் சந்தேக நபர்கள் எங்கே மறைந்திருக்கிறார் என்பது யாருக்கும் தெரிவதில்லை.

அமெரிக்கப் படைகள் மீது அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் சிறுசிறு தாக்குதல்கள் இப்போது நடை பெறுகின்றன. ஆனால் அமெரிக்க உளவுத்துறையின் கண்டுபிடிப் பின்படி, தாக்குதலில் ஈடுபட்டவர்கள் நிரந்தரமாக வசிப்பவர்களல்ல.

**கனடாவிலிருந்து—ரிஷி**

அவர்களில் பலர் பாகிஸ்தான்- ஆப்கானிஸ்தான் எல்லையூடாக வந்து தாக்கிவிட்டு திரும்பவும் பாகிஸ்தான் எல்லைக்குள் போய்விடுகிறார்கள் என்ற சந்தேகம் சி.ஐ.ஏக்கு இருக்கிறது.

அத்துடன் ஆப்கானிஸ்தான் பூமி அமைப்பில் குகைகளும், பள்ளத்தாக்குகளும், பாறைகளும் என்று நிறையவே மறைவிடங்கள் இருக்கின்றன. இதுவும் அமெரிக்காவுக்கு ஒரு "மைனஸ் பொயின்ற்"

(நாளை தொடரும்)

# எமது சமூகத்தில் பாரிய விளைவுகளை தோற்றுவித்திருக்கும் புலம்பெயர் வாழ்வு

**இறையியலில் கலாநிதிப்பட்டத்தை ரோமில் பெற்ற அ.பி.ஜெயசேகரம் அடிகளார், "யாழ்ப்பாணத்தின் பண்பாட்டு மயமாக்கல்" என்ற மையப்பொருளில் ஆய்வுக் கட்டுரையை எழுதியுள்ளார். 1987 முதல் 2001 வரை ஐரோப்பிய நாடுகளில் தங்கியிருந்து, இலங்கையிலிருந்து சென்ற புலம் பெயர்ந்த தமிழர்களுக்கு பணிபுரிந்துள்ளார். கத்தோலிக்க குருவாக இருந்தாலும், மதவேறுபாடின்றி அனைத்து தமிழ் மக்களுக்கும் தமிழ் ஆன்மீகப் பணியகங்களை ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ், இத்தாலி, டென்மார்க் போன்ற நாடுகளில் உருவாக்கியுள்ளார். தற்பொழுது நாடு திரும்பி, யாழ்ப்பாணம் புனித யாகப்பர் தேவாலயப் பணிகளைப் பொறுப்பேற்றுள்ள அவருடனான நேர்காணல் இது.**

***கேள்வி:-*** புலம்பெயர்ந்த மக்கள் தமது தாயகத்துக்குத் திரும்பக் கூடிய சூழ்நிலையில், உருவாகக் கூடிய 'பண்பாட்டு மோதல்' என்பதன் சாதக, பாதக நிலைமைகளை விளக்குவீர்களா?

***பதில்:-*** பண்பாட்டிற்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட விளக்கங்கள் உண்டு, சுருக்கமாக வாழ்வு முறை எனலாம். பிற பண்பாட்டு முறைமைகள் வாழவியலோடு இயல்பாக இணையுமாயின், மோதல்கள் ஆரோக்கியமானவை எனலாம். எமது மக்கள் புலம்பெயர்வுக்கு முன்னர், வெளிநாட்டு - குறிப்பாக, மேற்குலக வாழ்வுமுறைகளை அந்நியப்படுத்தி வந்தவர்கள். தற்பொழுது எமது உடன்பிறப்புக்கள் அங்கு சென்று வாழ்வதும் அவர்கள் இங்கு விடுப்புகளுக்கு வந்து தங்கி எம்மோடு வாழ்வதும், பல தாக்கங்களை உருவாக்குகிறது. அறிவியல் ரீதியாகப் பல அம்சங்களை ஏற்றுக் கொள்ள வேண்டியதாகவுமுள்ளது.

புலத்தில் குறிப்பாக, ஐரோப்பிய நாடுகளில் தொழில் மகத்துவமும், தொழில் சமத்துவமும் பாதுகாக்கப்படுகின்றது. ஒரு தொழிலாளி மதிக்கப்படுகின்றார், உயர் தொழிலுக்கு கொடுக்கப்படுகின்ற ஊதியங்களுக்கும், சாதாரண தொழிலாளிக்கான ஊதியங்களுக்கும் பெரிய விரிசல்கள் இல்லை. அனைத்து தொழில்களுககும் கற்கை நெறியுண்டு. அதில் சித்தியடைந்தவர்களே தொழிலில் அரசினால் அனுமதிக்கப்படுவர். உடல் உழைப்பும் சமூகத்திற்குத் தேவை. அதற்குச் சமூகம் மதிப்புக் கொடுக்கிறது. எமது நாடடில் தொழில் பாகுபாடு, ஏற்றத்தாழ்வு நிறைய உண்டு. மனித வாழவிற்கு அனைத்து தொழில் முறைகளும் தேவை. ஆனால், உடல் உழைப்பாளிகள் பயன்படுத்தப்படுகிறார்கள், மதிக்கப்படுவதில்லை. இங்கு செய்யமுடியாத செய்யவிரும்பாத தொழில்கள் அனைத்தையும் வேற்று நாடுகளில் தமிழ்மக்கள் விரும்பிச்செய்ய உந்தப்படுகின்றனர்.

அதனால், அவர்கள் வளர்கிறார்கள். அவர்களைச் சார்ந்து, நாடும் வளர்கிறது. இங்கு துவிச்சக்கர வண்டி ஓடப் பயப்படுகிற பெண்கள் அங்கு நெடுஞ்சாலைகளில் பாரிய வாகனங்களை ஓட்டுகிறவர்களாக மாறுவதாயின் அவர்களுக்கு அந்த நாடு கொடுக்கும் துணிவும், வாய்ப்பும், வசதிகளும அதிகம். மேலும் திறந்த, சுதந்திர, தாராள, பொறுப்புணர்வு கொண்ட பண்பாட்டிலே வளர்க்கப்படுவதால் உடல், உள, அறிவியல் வளர்ச்சிகளைக் காணமுடிகிறது. எதிரின பாலியரு




டன் ஆரோக்கியமாக வாழ்கிறார்கள். இரவில் எந்தவேளையிலும் பெண் தனியாகச் செல்வதைப் பார்க்க முடியும். இங்கு இரவு 6 மணிக்குப் பின்னர் பெண்கள் வெளிக்கிடக் கூடாதென்பர். இரு பாலருக்கும் நம்பிக்கையற்ற தன்மையை ஆரோக்கியமற்ற உறவை இது சுட்டுகிறது. சுதந்திர, திறந்த பண்பாட்டில் பின்னடைவுகளும் தொடக்கத்தில் ஏறபடலாம். இதைவிட மோசமானது காலங்காலமாக மக்கள் பண்பாட்டு அடிமைத்தனத்தில் பொறுப்பின்றி, சுதந்திரமின்றி அறிவியல் மந்தத்தில் வாழ்வதாகும். இதிலிருந்து எம்மைத் துறக்க நம்மிடம் துணிவும் தீர்மானமும் இருக்க வேண்டும். நம்மைத் துறக்கும் பொழுது நாம் மிகக் கொடுமையாகப் புண்படுத்தப்படலாம். இப்பாதையைத் தெரிவு செய்தேயாக வேண்டும். உலகளாவிய உயர் விழுமியங்களே பண்பாட்டுச் சாதக, பாதகங்களின் உரைகல்லாய் அமைய வேண்டும். தமிழ்த் தேசிய விடுதலை வீச்சிற்குப் பண்பாட்டுப் புரட்சி காலத்தின் தேவை. எமது உடன் பிறப்புகளின் புலம்பெயர் வாழ்வு எமது பண்பாட்டிற்குக் கிடைத்த பெரும் கொடை.

***கேள்வி:-*** பூகோளமயமாதல் பண்பாட்டு அம்சங்களில் ஏற்படுத்தும் மாற்றங்கள், தாக்கங்களை எப்படிப் பார்க்கிறீர்கள்?

***பதில்:-*** பொதுவாகப் பொருண்மிய, தொழில்நுட்ப, பண்பாட்டு, அரசியல் தொடர்புகளூடாக உலக நாடுகளையும் அதன் மக்களையும் நெருக்கமாகவும், ஒன்றிலொன்று தங்கியிருப்பதாகவும் ஒருங்கிணைக்கும் செயல் பூகோள மயமாக்கல். இம்மாற்றங்கள், விளைவுகள், தாக்கங்கள் அனைத்தும் உலகம் என்ற ஒரு உடலை உருவாக்குவதாயின், இதற்கு மூலவிசையாக இருப்பது ஒரு ஆன்மா. இவ் ஆன்மாதான் உலக மக்களின் தனித்துவங்கள், பண்பாடுகள், அவர்கள் பேசும் தாய்மொழி, அவர்கள் சிந்தனை, விடுதலைத் தகிப்புகள், உணர்வுகள், வாழ்வியல் போராட்டங்கள், சமய நம்பிக்கைகளாகும். எம்மைப் பொறுத்தளவில் எமக்குள்ளே மறைந்திருக்கும் சாதியம், வர்க்க பேதங்கள், சீதனக் கொடுமைகள் போன்றவற்றைக் களைவதற்கும் மனித சுயநிர்ணய உரிமைகள் பாதுகாப்பிற்கும் சிறந்த அமைப்பாக மாறின், அதனை ஏற்றுக்கொண்டு எமது மொழியினதும், பண்பாட்டினதும் உயர்விழுமியங்கள் சிதைவு படாமலிருப்பதையும் கவனிக்க வேண்டும். உலக மயமாக்கலில் ஒரு தனிமொழி, தனி இன, மத ஆதிக்கவெறிகளை இனங்காண வேண்டும். பூகோளமயமாக்கல், ஆங்கிலமயமாக்கல் அல்லது அமெரிக்க மயமாக்கலில்லை என்பது கண்டிப்பாக உணரப்பட வேண்டும்.

***கேள்வி:-*** ஈழத்தமிழர்களின் அரசியல், போராட்ட அம்சங்களில் 'புலம் பெயர்வு' ஏற்படுத்திய விளைவுகள் எவை? எமது அரசியல் பாதையில் வெளிநாடுகள், அந்நிய அமைப்புக்கள், நிறுவனங்கள் காட்டும் ஆர்வத்தின் நோக்கம், சாதக, பாதக நிலைமைகள் எவை?

***பதில்:-*** புலம் பெயர் வாழ்வு திட்டவட்டமான பாரிய விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. 1983ல் வெடித்த இனக்கலவரம் பாரிய புலப்பெயர்விற்கு வித்திட்டது. சிங்கள அரசும், தமிழ் இளைஞர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேற ஊக்குவித்து எஞ்சி இருப்பவர்களை அடக்கி விடலாம் என்ற ஒரு கற்பனையும் அதற்கு இருந்தது. ஆனால், இதற்கு மாறாக நிலைமைகள் மாற்றமடைந்தது. 1983-90களில் விசா இன்றி இலங்கையர்



அ.பி.ஜெயசேகரம் அடிகளார்

கிழக்கு ஜேர்மனிக்குள் போகமுடிந்தது. அங்கிருந்து மேற்கு ஜேர்மனி ஊடாக பல ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏன் கனடாவிற்கும் இவர்கள் புலம்பெயர்ந்தார்கள். மேற்கு ஜேர்மனியின் முதலாளித்துவப் பொருண்மியத்தை உடைப்பதற்குக் கிழக்கு ஜேர்மனியின் அகதிகள் வருகையை ஊக்குவித்தது, தமிழர்களுக்குச் சாதகமாகியது. சமகால ஆய்வின்படி ஆறு இலங்கைத் தமிழர்களில் ஒருவர் புலத்தில் வாழ்கின்றார். ஈழத்தமிழர்களின் 20 வருட போராட்டவியலுக்குத் தேவையான நிதியை புலம்பெயர் மக்கள் கொடுத்து உதவியுள்ளனர். இந்தியாவைத் தவிர மற்றநாடுகளுக்குச் சென்றவர்களை 1983 இற்கு முன்னும் பின்னும் என்று இருகூறாகப் பிரிக்கலாம்.

1983 இற்கு முன், தொழில் வாய்ப்புத் தேடிச் சென்றவர்கள் முதலாவது பிரிவு. அடுத்தது, 1983 இற்குப்பின் அகதிகளாகத்தஞ்சம் கோரிச் சென்றவர்கள். இவர்கள் தான் கூடுதலாக தங்கள் இயலாமையிலும் பாரிய நிதியுதவி வழங்கியவர்கள். ஈழவர்களின் போராட்டத்தை இந்தியா சர்வதேசமயமாக்க விரும்பவில்லை. சர்வதேசமயமாகினால் தனது நலன்களைத் திணிக்க முடியாதென்பது இந்திய அரசிற்குத் தெரிந்த உண்மை.

ஆனால், மேற்புலத்திலே வாழ்ந்த ஈழத்தமிழர்களினால் இது சர்வதேசமயமாக்கப்பட்டது. சொந்த நாட டில் அடக்குமுறைகளினால் தமிழர்கள் அவதியுறும்போது, புலம் பெயர்ந்தோர் தத்தமது நாடுகளில் கூட்டங்களைக் கூட்டினார்கள். சாத்வீகவழியில், மனித உரிமை மீறல்களை உலக மக்களுக்கு எடுத்துரைத்தார்கள். ஐரோப்பிய ஒன்றியத்தின் பல நாடுகளில் - 9 நாடுகளில் தமிழர்கள் வாழ்கின்றார்கள். தமிழருடைய குரலுக்கும், அவர்களது ஆதங்கங்களுக்கும் மனிதநல நிறுவனங்கள் குறிப்பாக, கத்தோலிக்க திருச்சபை பக்கபலமாக இருந்தது. 1987 இல் ஜேர்மனியில் கத்தோலிக்க திருச்சபையும் அந்நாட்டு அரசும் இணைந்து தமிழ் கத்தோலிக்கருக்கென்று ஆன்மீக பணியகத்தை உருவாக்கியது, தமிழரின் நியாயப் போராட்டத்தை உறுதிப்படுத்தியதாகும். மனித உரிமை மீறலகளுக்கு எப்பொழுதும் குரல் கொடுக்கும் ஒன்றியங்கள் இப்பிரச்சினையில் தம்மை ஈடுபடுத்திச் சர்வதேச அரங்கிலும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனங்களிலும் இதை முனைப்பிற்குக் கொண்டுவந்தனர். மேலும் இதனால் இலங்கையில் வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகளுடைய எண்ணிக்கை குறைககப் பெற்றது. பொருளாதார ரீதியாக நாடு பல தாக்கத்திற்கு உள்ளாகியது.

புலிகள் இயக்கம் பெரும் சக்தியாக வலுவடைந்தது. புலம் பெயர்ந்தவர்களுள் 95 விழுக்காட்டினர் விடுதலைப் புலிகளின் பின்னால், அணி திரண்டார்கள். இலங்கை அரசின் தொடர்ச்சியான அழுத்தங்களினால் இந்த இயக்கம் சில நாடுகளில் தடைசெய்யப்பட்டது. தடைசெய்யப்பட்டதற்கான முக்கிய காரணிகள் தமிழீழப்போராட்டம் நியாயமானதல்ல என்பதற்காகவல்ல. ஆனால், ஈழப்போராட்டத்திற்குப் புலத்தில் நிதியுதவி வழங்குவதனால் தங்கள் நாடுகளிலிலிருந்து பணம் வெளிநாடுகளிற்கு செல்வதனாலேயாகும். இந்நாடுகள் சிங்கள அரசின் அழுத்தத்திற்கு செவிசாய்த்தமைக்கு - தமிழர்களுக்கு நியாயமான உரிமை கொடுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை இலங்கை அரசு ஏற்றதே காரமாக அமைந்தது. இத்தடைகளினாலும் அதன் பின்புலத்தில் புகுத்தப்பட்ட நிபந்தனைகளினாலும் கனடா, பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகள் வலுக்கட்டாயமாக இதற்குள் இழுக்கப்பட்டார்கள்.

இன்னுமொரு காரணியுமுண்டு, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் 340,000 ஈழத் தமிழர் வாழ்கின்றனர், இப்பிரச்சினை தீராவிடில் தொடர்ந்து தமிழர் தமது நாடுகளுக்குப் படையெடுப்பர்.

அதனால், சுதேசிகளது தொழில் வாய்ப்புக்கள், வசதிகள் பறிபோகும், இதனால் உருவாகும், வெளிநாட்டவர் - சுதேசிகள் இடையிலான இன முறுகல், இவைகளைத் தீர்ப்பதற்கு ஒரேவழி அகதி அலைகளைக் கட்டுப்படுத்துவதேயாகும்.

தமது நாடுகளில் தமிழர் கணிசமான அளவு வசிப்பதால் ஐரோப்பிய ஒன்றியம் இதில் அதிதீவிர அக்கறையெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளமை இதற்குத் தகுந்தொரு உதாரணமாகும்.

நேர்காணல் -
எஸ்.சாந்தகுமார்.

# ஜே.வி.பி. தலைவரைச் சந்திக்க மங்கள சமரவீர லண்டன் பயணம்!

## தேர்தல் கூட்டு குறித்து ஆராயப்படுமாம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணிப் பிரமுகர் மங்கள சமரவீர, ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்வது தொடர்பான பேச்சுக்களை நடத்துவதற்காக, லண்டனுக்குப் பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். இதனை ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரான நந்தன குணதிலகவும் உறுதி செய்துள்ளார்.

ஜே.வி.பியுடன் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்வது தொடர்பாக, ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச சமரசிங்கவுடன் பேச்சுக்களை நடத்தவே மங்கள சமரவீர லண்டனுக்குச் செல்லவுள்ளார்.

ஜே.வி.பியுடன் தேர்தல் கூட்டு ஒன்றைச் செய்து கொள்வது தொடர்பாக ஆராய்வதற்கு இச் சந்திப்பை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகப் பொ.ஐ.மு. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# பனந்தொழில் வல்லுநர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் விநியோகம்

வட - மாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்களைப் பனந்தொழில் வல்லுநர்களின் பிள்ளைகளுக்கு விநியோகிக்கவுள்ளது. மேற்படி சமாசத்தின் சமூகநல மேம்பாட்டுத் திட்டத்தின் முதற்கட்டமாக 4,000 பனந்தொழில் வல்லுநர்கள் பயன்பெறவுள்ளனர்.

பணியாளர் நல மேம்பாட்டுத் திட்டம், பணிப்பாளர் சேமநலக் கொடுப்பனவுத் திட்டம் போன்ற திட்டங்களையும் 2003 ஆம் ஆண்டிலிருந்து சமாசம் அமுல்நடத்தத் திட்டமிட்டுள்ளதாகச் சமாசம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகள் யாழ். குடாநாட்டுக்கு விஜயம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் பேராசிரியர் அரவிந்த டீ சில்வா, நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

இவருடன் நீதி அமைச்சின் மேலதிக உதவிச் செயலாளர் செல்வி. லலானி பேசன், சட்டத்தரணி வசந்தகுமார ஆகியோரும் வருகை தந்துள்ளனர்.

இரு தினங்கள் குடாநாட்டில் தங்கியிருக்கும் இவர்கள், மாவட்டச் சிறுவர் கண்காணிப்புக் குழுவின் செயற்திட்டங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளவேண்டிய வேலைத் திட்டங்கள் குறித்து ஆராயவுள்ளனர்.

இவர்கள் கலந்துகொள்ளும் சிறுவர் நலன்களை ஆராயும் கூட்டம் இன்று காலை 8.45 மணிக்கு நல்லூர் கச்சேரி வீதியில் அமைந்துள்ள சாந்திகம் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச)

## உரும்பிராயில் கணினிப் பாடம்

உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஜனவரி மாதம் தொடக்கம் முறைசாராக்கல்விப் பிரிவில் செயற்திட்டத்தின் கீழ் தகவல் தொழில்நுட்பப் பாடம் கற்பிக்கப்படவுள்ளது. கல்வி கற்று வேலை வாய்ப்பை எதிர்பார்த்து இருப்போரும் ஆர்வமுள்ளோரும் இப்பயிற்சி நெறியில் பங்குகொள்ளலாம். (96)

# ஈராக்குடனான போர் தொடங்கினால் அமெரிக்காவுக்கு வசதிகள் தரப்படும்!


## சவூதி அரேபியாவின் திடீர் குத்துக்கரணம்

ஈராக்குடனான யுத்தத்தினை அமெரிக்கா ஆரம்பிக்கும் பட்சத்தில் அமெரிக்க இராணுவ நடவடிக்கைகளுக்கு வேண்டிய விமான தளங்களையும் பின்தள



வசதிகளையும் தாம் கொடுத்து உதவவிருப்பதாக சவூதி அரேபியா அறிவித்துள்ளது.

யுத்தத்தில் ஈடுபடும் விமானங்களுக்குரிய எரிபொருளை வழங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சவூதி அரேபியா வழங்குவதோடு - அமெரிக்க இராணுவத்தினர் தற்காலிகமாக நிலைகொள்ளவும் இராணுவத் தளபாடங்கள், உணவுகளை வழங்குவது தொடர்பான பின்தள வசதிகளை வழங்குவதற்கும் அமெரிக்க இராணுவ உயரதிகாரிகளுக்கு, சவூதி அரசாங்கம் உத்தரவாதமளித்துள்ளதாக மேற்கு ஐரோப்பிய ஊடகங்களுக்கு அமெரிக்க இராணுவ உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



அமெரிக்க, சவூதி தலைவர்கள்.

சவூதி அரசின் இந்த அறிவிப்பு ஒரு குத்துக்கரணமான நடவடிக்கை என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். இதுவரைகாலமும் ஈராக்கிற்கு எதிரான போரை சவூதி அரேபியா விமர்சித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆயுத உற்பத்தி விஞ்ஞானிகள் விபரம்; ஈராக் ஐ.நாவிடம் பட்டியல் கையளித்தது!

ஐக்கிய நாடுகள் ஆயுதப்பரிசோதகர்களிடம், தனது நாட்டின் ஆயுத உற்பத்தியுடன் தொடர்புடைய 500 ஈராக்கிய விஞ்ஞானிகளின் பெயர் விபரங்களை ஈராக் கையளித்துள்ளது.

ஐ.நா பாதுகாப்புச்சபை தனது கோரிக்கைகளில் ஒன்றாக, டிசெம்பர் மாத இறுதிக்குள் ஆயுத உற்பத்தியுடன் தொடர்புடையவர்களின் பெயர் விபரங்களை பாதுகாப்புச்சபையிடம் கையளிக்க வேண்டும் எனக் கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பாக்தாத் தன்னிடம் இருக்கும் அழிவுதரும் ஆயுதங்களை நிர்மூலமாக்கிக் கொள்ளுமாயின் - யுத்தத்தில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம் என வொஷிங்ரன் தெரிவித்துள்ளது.

அதேவேளை, வளைகுடாப் பகுதிகளுக்கு இராணுவத் தளபாடங்கள் மற்றும் துருப்புக்களையும் வரும் வாரங்களில் அமெரிக்கா குவிக்கவுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.



தீவிர சோதனைகளில் ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்கள்.

புஷ் தனது வாராந்த வானொலி உரையிலே, சதாம் அழிவுதரும் ஆயுதங்களை அழிக்காதுவிடின் - அவ்வாயுதங்களில் இருந்து ஈராக்கிய மக்களைக் காப்பாற்றுவதற்காக அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் இராணுவ நடவடிக்கைகளை எடுக்க வேண்டி வரும் எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - ஈராக்கிய வர்த்தகத்துறை அமைச்சர் "எதிரி மறக்க முடியாத பாடத்தினை ஈராக் மீது தாக்கத் தொடங்குவதன் மூலம் கற்றுக கொள்ளும்" எனத் தெரிவித்துள்ளார்.

# செச்னிய படையினரின் கவனக்குறைவே தற்கொலைத் தாக்குதலுக்குக் காரணம்!

## ரஷ்ய அரசாங்கம் குற்றஞ்சாட்டுகிறது



தாக்குதலில் பலியானோர் தொகை அதிகரிக்கலாம் என அச்சம்.

(மொஸ்கோ)

செச்னியாவில் நடைபெறற தற்கொலைப்படைத் தாக்குதலானது அந்நாட்டினது உயர் இராணுவ அதிகாரிகளின் கவனக்குறைவினாலேயே ஏற்பட்டதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ளது.

கடந்த சனிக்கிழமை செச்னியாவில் நடந்த தாக்குதலில் - தற்கொலைக் குண்டுதாரிகள், ரஷ்ய இராணுவச் சீருடையினை அணிந்து ரஷ்ய அடையாள அட்டைகளை காட்டியவாறு செச்னிய அரசாங்கத் தலைமையத்திற்குள் சென்று குண்டுகளை வெடிக்க வைத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்குண்டுத்தாக்குதலில் 55 பேர் கொல்லப்பட்டதுடன் 120 பேர் படுகாயமடைந்தனர்.

தற்போதுள்ள செச்னிய அரசாங்கத்திற்கு ரஷ்யா முழு ஆதரவினையும் வழங்கி வருவது தெரிந்ததே. இதேவேளை பிரிவினை கோரிப் போராடும் செச்னியப் போராளிகள் அமைப்பு இத்தாக்குதலுக்குப் பொறுப்பேற்றுள்ளது.

உலகவலம்

# தொடரும் வேலை நிறுத்தத்தினால் வெனிசுலாவுக்கு பெற்றோல் இறக்குமதி

வெனிசுலாவில் ஐந்தாவது வாரமாகத் தொடரும் ஜனாதிபதி சாவேசுக்கு எதிரான பொது வேலை நிறுத்தத்தால், அந்நாட்டின் பெற்றோலியக் கைத்தொழில் முழுமையாகச் செயலிழந்துள்ளது.

உலகிலேயே ஐந்தாவது பெரிய பெற்றோலிய ஏற்றுமதி நாடான வெனிசுலா தொடரும் போராட்டங்களால் - தனது வரலாற்றில் முதற்தடவையாக கப்பல் மூலம் வெளியிலிருந்து பெற்றோலியத்தை இறக்குமதி செய்யும் நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளது.

# செய்திப் படங்கள்



இஸ்ரேலின் ஒட்னீல் பகுதியில் உள்ள யூத குடியேற்றம் ஒன்றில் பலஸ்தீனர்கள் நடத்திய துப்பாக்கித் தாக்குதலில் நான்கு இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள நூலகமொன்றில் தேடுதல் நடத்தும் இஸ்ரேலியப் படையினர்.



காஸா நகரில் ஹமாஸ் இயக்கத்தினர் ஏற்பாடு செய்த, இஸ்ரேல் எதிர்ப்புப் பேரணி ஒன்றில் கலந்துகொண்ட லட்சக்கணக்கான மக்களை ஹமாஸ் போராளி ஒருவர் கையில் ஆயுதத்துடன் அவதானிக்கின்றார்.



பலஸ்தீனச் சிறுவனொருவன் கொண்டு செல்லும் காகிதப் பையும், இஸ்ரேல் படையினரின் சோதனையிலிருந்து தப்பவில்லை.



பலஸ்தீன நகரான றமழாவில் ஆஸ்பத்திரி ஒன்றின் மீது இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்ட பலஸ்தீன இளைஞர் ஒருவரின் சகோதரி மயான வாசலில் கதறியழும் காட்சி.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இராணுவத்தின் நிலைப்பாட்டை தனி ஒரு அதிகாரி தீர்மானிப்பதா?

## படையதிகாரிகள் மத்தியில் கேள்வி

(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து இராணுவத்தின் ஒட்டுமொத்த நிலைப்பாட்டையும் தனி ஒரு இராணுவ அதிகாரியின் அறிக்கை மூலம் தீர்மானிக்கப்பட்டது ஏன் என உயர் மட்டப்படையதிகாரிகள் மத்தியில் கேள்வி எழுந்துள்ளது.

மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவினால் 5 பக்க அறிக்கை முப்படைத் தளபதிகளுக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் கையளிக்கப்பட்டது. அந்த அறிக்கையின் பிரதியே புலிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இதில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரது சிபார்சோ அல்லது கையொப்பமோ இருக்கவில்லை. 21 ஆம் திகதி கையளிக்கப்படவிருந்தபோதும் 23 ஆம் திகதியே இந்த அறிக்கையை கண்காணிப்புக்குழு புலிகளிடம் கையளித்த[...]

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரது கையொப்பமின்றியே இந்த அறிக்கை கையளிக்கப்பட்டது குறித்து படையதிகாரிகள் மத்தியில் கேள்வி எழுந்துள்ளது. இவ்வாறு நடைபெற்றதன் பின்னண[ி] குறித்தும் அவர்கள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

# உயர்பாதுகாப்பு வலய அறிக்கையை ஒஸ்ரினும் பலகல்லவுமே தயாரித்தனர்

## என்மீது வீண் பழி என்கிறார் சரத் பொன்சேகா

(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயங்களில் மீள் குடியேற்றம் செய்வது தொடர்பான அறிக்கையைத் தான் தயாரிக்கவில்லை என்றும் தனிப்பட்ட ரீதியாக தன் மீது குற்றச்சாட்டுக்கள்சுமத்தப்படுவதாகவும் குடாநாட்டுக்கான படைத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவும் இணைந்தே தயாரித்தனர்.யாழ். குடாநாட்டுக்கான படைத்தளபதி என்ற வகையில் அறிக்கையை ஒப்படைக்கும் வேலையை மட்டுமே நான் செய்தேன். இதில் எந்த சிபார்சுகளையும் நான் செய்யவில்லை.

இப்படியிருக்க தனிப்பட்ட ரீதியில் என் மீது குற்றம் சாட்டப்படுகிறது என மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார்.

(01)

### ஓமந்தையில் வெடி மருந்துடன் இருவர் கைது

(நமது நிருபர்)

ஓமந்தையில் வன்னிப்பகுதிக்குள் வெடி பொருட்களை கடத்திச் செல்ல முற்பட்ட இரண்டுபேரைத் தாம் கைது செய்திருப்பதாக படையினர் அறிவித்துள்ளனர். இவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### இலங்கை...

அமைச்சர்களின் பாதுகாப்புப்பிரிவு, பிரதமரின் பாதுகாப்புப்பிரிவு ஆகியவற்றைச்சேர்ந்த அதிகாரிகளுக்கு பயிற்சிகளை வழங்கவேண்டும் என பாதுகாப்பு நிபுணர்கள் வழங்கிய ஆலோசனையின் அடிப்படையிலேயே இவ்வுடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இவ்வுடன்பாட்டின்படி முதற்தொகுதி பாதுகாப்பு அதிகாரிகள் மென்சார் பயிற்சித்தளத்துக்கு பயிற்சிக்காகச் சென்றுள்ளனர். இந்த அணியில் 100 அதிகாரிகள் இடம்பெற்றுள்ளனர். இவர்களுக்கு சுமார் ஒரு மாதகால விசேட பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை - இராணுவக் கொமாண்டோக்கள், விசேட அதிரடிப்படைக் கொமாண்டோக்களுக்கும் இதே பயிற்சித்தளத்தில் கறுப்புப் பூனை அதிகாரிகளால் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. பயங்கரவாதத்திற்கு எதிரான மேலதிக பயிற்சி என்று இந்தப்பயிற்சி அழைக்கப்படும்.

சுமார் 2 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள மென்சார் பயிற்சித் தளத்திலேயே கறுப்புப்பூனைப் படையதிகாரிகளால் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தப் பயிற்சித்தளத்தில் இலங்கையின் பாதுகாப்பு அதிகாரிகளைப் பயிற்றுவிப்பது தொடர்பாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவர் உள்ளிட்ட அதிகாரிகள் குழு ஆராய்ந்திருந்ததுடன், ரவி ஜெயவர்த்தனாவின் ஆலோசனையும் பெறப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - மேலும் 20. ஜனாதிப்தி பாதுகாப்புப்பிரிவு அதிகாரிகள் மேற்படி தளத்துக்கு பயிற்சிக்காக அனுப்பப்படவுள்ளனர்.

# சந்திரிகா – ஜே.வி.பி. நேற்றிரவு சந்திப்பு

## பாதுகாப்பு விவகாரங்கள் குறித்து பேச்சு

(கொழும்பு)

உயர்பாதுகாப்பு வலயத்தை விட்டுக் கொடுப்பது தனிநாட்டை புலிகளிடம் வழங்குவதற்கு சமனானது. எனவே உயர்பாதுகாப்பு வலயத்தை ஒருபோதும் விட்டுக் கொடுப்பதற்கு ஜனாதிபதி என்ற வகையில் நீங்கள் இடமளிக்கக் கூடாது. இவ்வாறு ஜனாதிபதியை நேற்றுச்சந்தித்த ஜே.வி.பி தூதுக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்று இரவு 7.00 மணியளவில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற மேற்படி சந்திப்பில் ஜே.வி.பியின் தரப்பில் ரில்வின் சில்வா, விமல் வீரவன்ச, அனுரகுமார திசாநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர். ஜனாதிபதியுடன் லக்ஷ்மன் கதிர்காமர் உடனிருந்தார்.

சுமார் ஒன்றரை மணிநேரம் இடம பெற்ற இச்சந்திப்பின் போது, வடக்கில் உள்ள உயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து படையினரை விலக்கிக் கொள்வதை ஜனாதிபதி தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதியிடம் ஜே.வி.பி. சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# கடற்படையின் பாஸ் இன்றி நெடுந்தீவு செல்ல முடியாது

(நெடுந்தீவு)

கடற்படையினரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை இன்றி நெடுந்தீவிற்கு வருகின்ற பொது மக்களை குறிகட்டுவான் இறங்கு துறையில் உள்ள கடற்படையினர் நெடுந்தீவுக்குச் செல்ல அனுமதி மறுத்து வருகின்றனர்.

இதனால் நெடுந்தீவுக்கு வெளியிடங்களிலிருந்து வருவோர் குறிகட்டுவான் பகுதிவரை சென்று திரும்பவேண்டிய நிலை தொடர்கிறது.

இதற்கு முன்னரும் பல தடவைகள் நெடுந்தீவு செல்வதற்குக் கடற்படையினர் திடீர் திடீரெனப் புதிய நடைமுறைகளை விதித்து வந்ததும்,

பல இடங்களில் புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் பாஸ் நடைமுறை நீக்கப்பட்டபோதும் நெடுந்தீவில் பாஸ் முறை தற்போது அமுல்படுத்தப்பட்டு வருவது[ம்] குறிப்பிடத்தக்கது. (113)

### படையதிகாரிகளுடன்...

மூலம் தீர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதனால் ஏனைய பிரச்சினைகள் குறித்து பின்னரே ஆராயப்படும். லட்சக்கணக்கான மக்கள் தமது சொந்தப் பகுதிகளுக்குத் திரும்ப முடியாமல் இருக்கும்போது அடிப்படைப் பிரச்சினைகள் குறித்துப்பேச முடியாது. மீளக்குடியமர்வும், புனர்வாழ்வுப் பணிகளும் இன்றைய நிலையில் முக்கியமான பணிகளாக அமைகின்றன.

தாய்லாந்துப் பேச்சுக்களுக்கு முன்னர் புலிகளின் தளபதிகளுக்கும் இராணுவத் தளபதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நிகழ்வதற்கு வாய்ப்புக்கள் இல்லை என கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார்.

### இனம் தெரியாத சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரிக்கு முன்பாக வெள்ளிக்கிழமை ஓர் ஆணின் சடலம் பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டு, யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

நடுத்தர வயது மதிக்கத்தக்க இந்த ஆணின் சடலத்தை இது வரை எவரும் உரிமை கோரவில்லை. இதனால் இச்சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் அடையாளம் காணும் பொருட்டு வைக்கப்புட்டுள்ளது.

### உரும்பிராய்...

இச்சம்பவம் தொடர்பாக பாடசாலைக் காவலாளி ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுவருகின்றார். (லி,கி)

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
E.mail: thangan 672002 @ yahoo.com
T.P.: 021-2222588
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
பிரதான வீதி, சித்தங்கேணி.
Better place for your Children
உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த இடம்
(சி-255)

# மயிலங்காட்டுக்குச் சென்ற யுவதியை பதினொரு நாட்களாக காணவில்லை

## சந்தேகத்தில் குடும்பஸ்தர் கைது

(யாழ்ப்பாணம்)

ஈவினை - திடற்புலம் பகுதியில் யுவதி ஒருவர் காணாமல் போன சம்பவம் தொடர்பாக குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யபட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான செல்லப்பா பாபு (வயது-30) என்பவரே கைது செய்யப்பட்டவர் ஆவார்.


வன்னியிலிருந்து சொந்த இடமான ஈவினைக்குத் திரும்பிய மயில்வாகனம் புனிதா (வயது-18) கடந்த 17ஆம் திகதி பிரஸ்தாப குடும்பஸ்தரின் உதவியுடன் மயிலங்காட்டிலுள்ள உறவினர் வீட்டுக்கு சென்றார். அதன்பின் இவர் 11 தினங்களாக வீடு திரும்பவில்லை. காணாமல்போனவரைப் பெற்றோர் தேடியபோதும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இச்சம்பவம் தொடர்பாக பெற்றோர், சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து, யுவதியைக் கூட்டிச் சென்ற பிரஸ்தாப நபரை நேற்று முன்தினம் கைது செய்த பொலிஸார், மல்லாகம் நீதவான் முன் அவரை ஆஜர் செய்தனர். பிரஸ்தாப நபரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்திரவிட்டார்.

இச்சம்பவத்தையடுத்து இப் பகுதியில் பதற்றம் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(கி,ச)

31 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
18-08-1917

உதிர்வு
01-12-2002

அமரர்
வைத்திலிங்கம் சரவணமுத்து

அன்பின் திருவுருவே!
பண்பின் உறைவிடமே!
வாழ்வின் வழிகாட்டியே!
குடும்பத்தின் ஒளிவிளக்கே!
எமது ஆருயிர்த் தெய்வமே!
எங்கு சென்றீர் எம்மைவிட்டு
எங்கு காண்போம் உம்மை இனி?

சிவலிங்கப் புளியடி,
749,K.K.S.வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.
(சி-376)

பொங்கலன்று வெளிவரும்
தவிர்க்கமுடியாத காரணத்தால்
லாலாவின் இலவச
விளம்பரப் பத்திரிகை
தைப்பொங்கல் தினத்தன்று
வெளியிடப்படவுள்ளது.
உரிமையாளர்:
லாலா சோப்,
அச்சுவேலி.
(சி-377)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 30.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.